KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

Follow us:
# தமிழன்
THAMILAN தமිලන්
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர்: 05, இதழ்: 224 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(06.05.2025) ஹிஜ்ரி 1446, துல்கஃதா - 07, 0115 886187- விலை ரூ.50 பக்கங்கள் 12

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823



# தேர்தல் பலப்பரீட்சை இன்று!

## ★ 13,759 வாக்களிப்பு நிலையங்கள்
## ★ 75,589 வேட்பாளர்கள் களத்தில்
## ★ ஒரு கோடியே 71 இலட்சத்து 56 ஆயிரத்து 338 வாக்காளர்கள்
## ★ 2 இலட்சம் அரச உத்தியோகத்தர்கள் கடமையில்

நா.தினுஷா

339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் இன்று (06) காலை 7.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை 13,759 வாக்களிப்பு நிலையங்களில் பலத்த பாதுகாப்புடன் இடம்பெறுகின்றது.

2025 மார்ச் மாதம் 03ஆம் திகதி மற்றும் 10 ஆம் திகதி தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட்ட 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்பாளர்களை தெரிவுசெய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களுக்கமைய 49 அரசியல் கட்சிகள் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றன. அரசியல் கட்சிகளின் சார்பில் 2404 குழுக்களும் சுயாதீன குழுக்களாக 257 குழுக்களும் தேர்தலில் போட்டியிடுகின்றன. 75,589 வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். அத்தோடு ஒரு கோடியே 71 இலட்சத்து 56ஆயிரத்து 338 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர். » 02 பக்கம்

## 24 பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக பெயர் குறிப்பிடப்பட்ட பாடசாலைகள் தவிர்ந்த, ஏனைய பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் நாளை (07) வழமைபோல் இடம்பெறுமென கல்வி அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, கீழே பெயர் குறிப்பிடப்படும் 24 பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய சகல பாடசாலைகளிலும் வழமைபோல் கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறும்.

இன்று நாடு பூராகவும் இடம்பெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு நேற்றும் (05) இன்றும் (06) பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாளை மூடப்படும் பாடசாலைகளின் பட்டியல் பின்வருமாறு,

கொழும்பு மாவட்டம் கொழும்பு ரோயல் கல்லூரி (கொழும்பு 07), கம்பஹா மாவட்டத்தில் நிட்டம்புவ ஸ்ரீ சங்கபோதி மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை), வெயாங்கொடை பத்தலகெதர சியத தேசிய கல்வி விஞ்ஞான பீடம், வித்யாலோக மகா வித்தியாலயம் - பத்தல கெதர, களுத்தறை மாவட்டத்தின் திஸ்ஸ மத்திய மகா... » 02 பக்கம்

## காலி வீதியில் பலர் பார்த்திருக்க அதிகாலையில் கொடூரம்

### கல்கிஸையில் இளைஞனை விரட்டி விரட்டி துப்பாக்கிச் சூடு





கல்கிஸை கடற்கரை வீதியில் நேற்று (05) காலை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் 09 மில்லிமீற்றர் ரக துப்பாக்கியில் இளைஞன் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொண்டிருந்தனர். » 02 பக்கம்

## ஜனாதிபதிக்கு எதிராக அவதூறு

### சி.ஐ.டியில் முறைப்பாடு

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு எதிராக அவதூறான மற்றும் தவறான கருத்துகள் தொடர்பாக, தேசிய லொத்தர் சபையின் முன்னாள் செயற்பாட்டுப் பணிப்பாளரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மக்கள் தொடர்பு பணிப்பாளர் நாயகமுமான துசித ஹல்லொலுவவுக்கு எதிராக நேற்று முன்தினம் (04) குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பெயரைப் பயன்படுத்தி வெளியிடப்பட்ட அவதூறான கருத்துகள், ஜனாதிபதியின் நற்பெயருக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், துசித ஹல்லொலுவ மற்றும் அந்தக் கருத்துகளை சமூக ஊடகங்களின் வாயிலாக பரப்ப நடவடிக்கை எடுத்த சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் தொடர்பில்... » 02 பக்கம்

## வங்கிகளுக்கு இன்று விடுமுறை

» 02பக்கம்

## டெங்கு - சிக்குன்குன்யா வைரஸ் காய்ச்சல் தீவிரம்

### காய்ச்சல் நீடித்தால் வைத்தியரை அணுகுவது கட்டாயம்

(கே.சுபானி)

நாட்டில் நுளம்புகளால் பரவும் வைரஸ் காய்ச்சல் மற்றும் சாதாரண வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், இரண்டு நாட்களுக்கும் மேலாக காய்ச்சல் நீடிக்குமாயின் வைத்தியரை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, காய்ச்சல் ஏற்படின் வைத்தியரின் ஆலோசனையைப் பெறாது வீட்டிலேயே சிகிச்சைப் பெற்றுக்கொள்வது நோய்த் தன்மையை அதிகரிக்கச்செய்யும் என விசேட... » 02 பக்கம்

## சதொச பொருட்களின் விலை 23 சதவீதத்தால் வீழ்ச்சி

லங்கா சதொச 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக் காலகட்டத்தை அறிவித்தது. அதன் செயற்பாட்டு சிறப்பையும் வாடிக்கையாளர் சார்ந்த நோக்கங்களையும் மேலும் உறுதிப்படுத்தியது. 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, லங்கா சதொச அதன் பொருட்களின் விலை 23 சதவீதம் குறைத்துள்ளதாக லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர் சமித்த பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,... » 02 பக்கம்



## உஷ்

உள்ளூராட்சி மன்ற இன்றைய தேர்தலுக்கு பின்னர் நாட்டில் பலம்வாய்ந்த அரசியல் கூட்டணி ஒன்று அமைக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் இது தொடர்பில் ஏலவே உத்தியோகப்பற்றற்ற முறையில் பேச்சு நடத்தியுள்ளன. அரசாங்கத்தை எதிர்க்க வலுவான எதிர்க்கட்சி கூட்டணி அவசியம் உணரப்பட்டுள்ளதால் இந்த ஏற்பாடு நடப்பதாக தகவல்.

## நாடு திரும்பிய 22 பாதாள உலகத்தார்

### மேலும் 20 பேரை அழைத்துவர ஆலோசனை



வெளிநாடுகளிலுள்ள பாதாள குழு உறுப்பினர்களில், கடந்த வருடத்தின் ஆரம்ப பகுதியிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் 22 பேர் வரையானவர்கள் நாட்டுக்கு மீள அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் மேலும் 20 வரையானவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக இராஜதந்திர மட்ட... » 02 பக்கம்

## அதிவேக நெடுஞ்சாலையில் பஸ்களை நிறுத்திய விவகாரம்

### பொலிஸாருக்கு எதிராக விசாரணை



» 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



இன்றைக்குப் பிறகும் மக்கள் மீதான பாசம் தொடருமோ...?

# 20ஆவது ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் தின கொண்டாட்டம்

## ஜனாதிபதி இன்று பிரதான உரை

வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் இன் (Luong Cuong) அழைப்பின் பேரில் வியட்நாமுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நாளை (06) ஹோ சி மின் நகரில் ஆரம்பமாகும் 20ஆவது ஐக்கிய நாடுகளின் வெசாக் தின கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று பிரதான உரை நிகழ்த்தவுள்ளார்.

இலங்கை நேரப்படி இன்று (06) காலை 7.40 மணியளவில் ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையின் 20ஆவது வெசாக் தின நிகழ்வில் பிரதான உரையை நிகழ்த்தவுள்ளார். இந்த உரை இன்று உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் மாலை 5.00 மணிக்கு தொலைக்காட்சிகளில் ஒளிபரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

"மனித கண்ணியத்துக்கான ஒத்துழைப்பு மற்றும் சகிப்புத்தன்மை: உலக அமைதி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான பௌத்த புரிதல்" என்ற தொனிப் பொருளில் நாளை ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகளின் வெசாக் கொண்டாட்டம் மே 08 வரை நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் இலங்கை, இந்தியா, நேபாளம், லாவோஸ் மற்றும் கம்போடியா ஆகிய பௌத்த நாடுகளைச் சேர்ந்த உயர்மட்ட பிரதிநிதிகள் மற்றும் நாடுகள் மற்றும் 85 பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 2,800 பேர் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

## சதொச பொருட்களின்...

கடந்த காலாண்டுடன் ஒப்பிடுகையில் இந்த காலாண்டை ஒப்பிடும்போது பொருட்களின் விலை 23 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இதனூடாக நுகர்வோருக்கு பெரும் இலாபத்தை பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது. அதேபோல் நுகர்வோரின் வருகை 5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

மொத்த நட்டம் 28 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதுடன் நிர்வாக செலவை 20 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துச் செலவும் 07 சதவீதத்தால் குறைப்பட்டுள்ளது.

புத்தாண்டு காலத்தில் நாளொன்றுக்கு 870 மில்லியன் ரூபா விற்பனை செய்துள்ளோம். நுகர்வோர் மற்றும் ஊழர்களின் ஒத்துழைப்பின் காரணமாகவே இந்த இலக்கை அடைந்துள்ளோம். மேலும் பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன. பொருட்களின் பெறுமதியுடன 28 சதவீதத் தால் விலை குறைக்க நடடிக்கை எடுத்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## வங்கிகளுக்கு...

நாடு முழுவதும் இன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறுகின்றமையினால் இன்று (06) சகல வங்கிகளும் காலை 11.00 மணி வரை மாத்திரம் திறந்து வைக்கப்படுமென இலங்கை வங்கி சேவை சங்கம் அறிவித்துள்ளத.

அதற்கமைய, சகல வங்கிகளும் இன்று காலை 8.30 மணிக்கு திறக்கப்பட்டு இரண்டரை மணிநேரம் திறந்து வைக்கப்படுமென அந்தச் சங்கம் மேலும் அறிவித்துள்ளது. நாளையிலிருந்து (07) வங்கி சேவைகள் மீண்டும் வழைபோல் இடம்பெறும்.

## ஜனாதிபதிக்கு...

துரித விசாரணை நடத்தி, சட்ட நடவடிக்கை எடுக்குமாறு இந்த முறைப்பாட்டில் கோரப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக அவரின் சட்டத்தரணி அகலங்க உக்வத்தே மற்றும் சட்டத்தரணி உபுல் குமாரப்பெருமவினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 24 பாடசாலைகளுக்கு...

வித்தியாலயம் (களுத்துறை வடக்கு), மியுசியஸ் வித்தியாலயம் (களுத்துறை வடக்கு), வெலாபுர மகா வித்தியாலயம் (களுத்துறை வடக்கு), கண்டி மாவட்டத்தில் மஹா சென். சில்வெஸ்டர் வித்தியாலயம் (கண்டி), மஹா சென். சில்வெஸ்டர் வித்தியாலயம் (ஆரம்ப பிரிவு – கண்டி), மஹா ஸ்ரீ சுமங்கல வித்தியாலயம் (கண்டி), மாத்தளை மாவட்டத்தில் கிறிஸ்தவ தேவாலய தேசிய பாடசாலை (மாத்தளை), மஹா பாக்கியம் தேசிய பாடசாலை (மாத்தளை) ஆகிய பாடாசாலைகளுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நுவரெலியா மாவட்டத்தில் நு/காமினி தேசிய பாடசாலை (நுவரெலியா), காலி மாவட்டத்தில் கா/சவுத்லன்ட்ஸ் மகிளிர் வித்தியாலயம் (காலி ), மாத்தறை மஹர/சென் சர்வேசஸ் வித்தியாலயம் (மாத்தறை), மஹர/மஹாமாயா மகளிர் வித்தியாலயம் (மாத்தறை), யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ் மத்திய மஹா வித்தியாலயம், மட்டக்களப்பு மட்/ ஹிந்து வித்தியாலயம் (மட்டக்களப்பு) ஆகிய படாசாலைகளுக்கும் நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தின் ஹாட்லி கல்லூரி (அம்பாறை), திருகோணமலை மாவட்டத்தில் திரு/விபுலானந்த வித்தியாலயம் (திருகோணமலை), குருநாகல் மாவட்டத்தில் மலியதேவ ஆண்கள் வித்தியாலயம் (குருநாகல்), மலியதேவ மகளிர் வித்தியாலயம் (குருநாகல்), சேர் ஜோன் கொத்தலாவல வித்தியாலயம் (குருநாகல் ), தொழில்நுட்ப கல்லூரி (குருநாகல்) ஆகிய பாடசாலைகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

## அதிவேக நெடுஞ்சாலையில்...

தொழிலாளர் தினத்தன்று அதிவேக நெடுஞ் சாலையில் பஸ்களை நிறுத்திய விவகாரத்தில், கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் விசாரணைகளின் முடிவுகளுக் கமைய சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளை பணிநீக்கம் செய்வதா அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதா என்பது குறித்து ஆராயப் படுமென்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (05) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் கருத்து த் தெரிவிக்கையில்,

மே தினத்தன்று அதிவேக நெடுஞ்சாலையில் பஸ்களை நிறுத்தி உணவு உட்கொண்ட விவகாரத் தில் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய, இதுபோன்ற சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் கடமையிலிருந்து பொலிஸார் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சம்பவத்தில் பொலிஸ் அதிகாரிகள் அவர்களின் கடமையை மீறி செயற்பட்டிருந்தால் அதுதொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதிவேக நெடுஞ்சாலையில் பஸ்களை நிறுத்து வதற்கு அனுமதியில்லை என்பது பஸ் சாரதிகள் நன்கறிவார்கள். அவ்வாறு இருந்தும் பஸ்களை நிறுத்தியமை தொடர்பிலும் சட்ட நடவடிக்களை முன்னெடுத்து வருகின்றோம். பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் முன்னெடுப்படுகின்றன. இந்த விசாரணைகளின் முடிவுகளுக்கமையவே சம்பந் தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளை பணிநீக்கம் செய்யவோ அல்லது அவர்களுக்கு உதிராக ஒழுக்காற்று நடவடிக்கையோ எடுக்கப்படும் என்றார்.

# இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் 04 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்



இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் பல்வேறு துறைகள் சார்ந்த நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் ஒரு இணக்கப்பாட்டு ஒப்பந்தமும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன.

வியட்நாம் ஜனாதிபதி மாளிகையில் நேற்று (05) இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இணக்கப்பாட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டன.

இதன்போது, வியட்நாம் சோசலிச குடியரசுக்கும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இடையே சுங்க விவகாரங்களில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

வியட்நாமின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கும் இலங்கையின் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சுக்கும் இடையிலான இயந்திர உற்பத்தி ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம்,வியட்நாம் விவசாய விஞ்ஞான அகாடமிக்கும் இலங்கை விவசாயத் திணைக்களத்துக்கும் இடையிலான விவசாய ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கையின் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனத்துக்கும் வியட்நாமின் இராஜதந்திர அகாடமிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், மற்றும் வியட்நாம் வர்த்தக ஊக்குவிப்பு முகவர் நிறுவனத்துக்கும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகிய ஒப்பந்தங்கள் (MoU) கைச்சாத்திடப்பட்டன.

இந்த ஒப்பந்தங்கள் மூலம் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்ளல், இராஜதந்திரிகள், நிபுணர்கள்,அதிகாரிகள், வல்லுநர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பரிமாற்றம் அதேபோன்று, கல்வி மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சிகள், பல்வேறு பாடநெறிகள், கருத்தரங்குகள், இராஜதந்திரத் துறையில் ஏனைய கல்வி நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி தொடர்பான நிபுணத்துவத்தை ஒழுங்கமைக்கவும் பரிமாறிக்கொள்ள வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இரு தரப்பினருக்கும் பொருத்தமான வர்த்தகத் தகவல் மற்றும் சந்தை நுண்ணறிவு பரிமாற்றம், இரு நாடுகளிலும் நடைபெறும் வர்த்தக கண்காட்சிகள் மற்றும் ஊக்குவிப்பு வாய்ப்புகளில் கூட்டு பங்கேற்பு மற்றும் வர்த்தக பிரதிநிதிகளுக்கு இடையே சந்திப்புகளை ஏற்பாடு செய்தல் உள்ளிட்ட பரந்த அளவில் வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கு இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் பல்வேறு வகையான வாய்ப்புகளை வழங்கும்.

இந்த இணக்கப்பாடுகள் ஊடாக குறிப்பாக பதப்படுத்தப்பட்ட உணவுகள், கடற்றொழில் நடவடிக்கைகள், ஆடைக் கைத்தொழில் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட விவசாயத்துக்கு குறிப்பிடத்தக்க சந்தை வாய்ப்புகளை இரு நாடுகளுக்கும் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## டெங்கு - சிக்குன்குன்யா...

வைத்திய நிபுணர் வைத்தியர் அச்சலா பால சூரிய எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது டெங்கும் மற்றும் சிக்குன்குன்யா வைரஸ் பரவல் அதிகரித்துள்ளது. அதேபோன்று சாதாரண வைரஸ் பரவலும் அதிகரித்துள்ளது. இந்நோய்களின் பிரதான அறிகுறிகள் அனைத்தும் ஒருமித்ததாகவே காணப் படுகின்றன. இதனால் இரண்டு நாட்களுக்கும் மேலாக காய்ச்சல் காணப்படுமாயின் அது டெங்குவா, சிக்குன்குன்யாவா அல்லது சாதாரண வைரஸ் காய்ச்சலா என்று உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

காய்ச்சல் ஏற்படுமிடத்து வைத்தியரை அணுகி, ஆலோசனை பெற்றுக்கொள்வது அவசியமாகும். அதனை விடுத்து நோய்த் தன்மையை கடுமையாக்கும் மருந்துகளை பெற்றுக்கொள்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

மேலும், சாதாரண காய்ச்சல் ஏற்படுமிடத்து வைத்தியரின் ஆலோசனை பெறாது, வேதனையை குறைக்கக்கூடிய மருந்துகளை மருந்தகங்களில் பெற்று பாவனைக்கு எடுத்துக்கொள்ளும் மருந்துகளால் நோய்த்தன்மை தீவிரமடையக்கூடும்.

இரண்டு நாட்களுக்கும் மேலாக காய்ச்சல் காணப்படுமாயின் சோர்வு, மூட்டுவலி, தசைவலி இருப்பின் சிகிச்சைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

சிக்குன்குன்னியா வைரஸ் தொற்று ஏற்படுமிடத்து மூட்டுவலி ஏற்படும். இது ஒரு மாதத்துக்கும் அதிகமான காலம் நீடிக்கக்கூடும் என அவர் தெரிவித்தார்.

சிக்குன்குன்னியா வைரஸ் தொற்றுக்குள்ளாகுமிடத்து பிரதான அறிகுறிகளாக கடுமையான காய்ச்சல், குமட்டல் மற்றும் சோர்வு, மூட்டு வலி, தலைவலி, தோல் வடுக்கள், கண் பிரச்சினைகள் காணப்படும். சிக்குன்குன்யாவால் பாதிக்கப்பட்டோர் ஒரு வார காலத்துக்குள் குணமாகிவிடும் நிலையில், விசேடமாக முதியோருக்கு ஒரு மாதத்துக்கும் மேலாகவோ அல்லது வருட கணக்காகவோ மூட்டுவலி காணப்படும். நாட்டில் கடந்த ஜனவரி முதல் இதுவரையான ஐந்து மாத காலப்பகுதிக்குள் 17,000 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட் டுள்ளதுடன் சிக்குன்குன்யாவால் 16,600 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் 50 சதவீதமானோர் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் 1,800 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக, கொழும்பு மநகர சபையின் பிரதான வைத்திய அதிகாரி வைத்தியர் கீத்திக்கா ரத்னவர்தன தெரிவித்துள்ளார்.

## காலி வீதியில் பலர்...

தெஹிவளையைச் சேர்ந்த 19 வயதான இளைஞர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். இவர் நகரசபை பணியாளர் என சொல்லப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டில் இருந்து தப்பிப்பதற்காக கிளை வீதியொன்றில் இருந்து பிரதான வீதியை நோக்கி ஓடிய இளைஞனை துரத்தி துரத்தி துப்பாக்கிதாரி சுட்டுப் படுகொலை செய்துள்ளார்.

அதிகதூரம் ஓட முடியாது தடுமாறி விழுந்த இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு சந்தேகநபர்கள் தப்பிச் சென்றனர். துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்த நபர் களுபோவில மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

**அதிகரிக்கும் குற்றச் செயல்கள்**

இந்த ஆண்டு இதுவரை நாடு முழுவதும் 42 துப்பாக்கிச் சூடு சம்பவங்களும் 25 தொடர்புடைய இறப்புகளும் பதிவாகியுள்ளன.

குற்றச் சம்பவங்களின் அதிகரிப்பு மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்லும் துப்பாக்கிதாரிகள் தாக்குதல்களை நடத்தி தப்பிச் செல்வது எவ்வளவு எளிது என்பது குறித்து, கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த கொலைகளில் பெரும்பாலானவை பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையேயான போதைப்பொருள் போருடன் தொடர்புடையவை என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இது தொடர்பில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, தனது எக்ஸ் பதிவில் விரக்தியை வெளிப்படுத்தினார்.

"இலங்கை காவல்துறை என்ன செய்கிறது? நேற்றுக் காலை மீண்டும் கல்கிஸையில் 19 வயது இளைஞன் ஒரு துப்பாக்கிதாரியால் துரத்தப்பட்டு ஓடுவதைக் காணலாம். பின்னர் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். கடந்த சில மாதங்களில் எத்தனை துப்பாக்கிச் சூடுகள் நடந்தன என்பது எனக்கு நினைவில் இல்லை.இலங்கையைப் பாதுகாப்பாக வைத்திருப்பதில் ஜனாதிபதி அநுர முற்றிலும் தோல்வியடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கில் பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க பல்வேறு தரப்பினரிட மிருந்தும் அரசாங்கமும் காவல்துறையும் அதிகரித்து வரும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில், வலுவான நடவடிக்கைக்கான அழைப்புகள் அதிகரித்து வருகின்றன.

இதேவேளை, நேற்று 19 வயது இளைஞன் கொலை செய்யப்பட்ட சம்பவம், அவரது தாயாருடன் தொடர்புடைய போதைப்பொருள் நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

காவல்துறையினரின் கூற்றுப்படி, போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக பாதிக்கப்பட்டவரின் தாய் மீது பல்வேறு நீதிமன்றங்களில் பல வழக்குகள் இருப்பதாக விசாரணைகள் தெரிவிக்கின்றன.

இந்தக் கொலை போதைப்பொருள் நடவடிக்கைகளுடன் தொடர்புடையதா என்பதைக் கண்டறியவும் சம்பந்தப்பட்ட சந்தேகநபர்களை அடையாளம் கண்டு கைது செய்யவும் கல்கிஸை காவல்துறை விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

## நாடு திரும்பிய...

பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவ்வாறு அழைத்துவரப்படுபவர்களுக்கு எதிராக உள்நாட்டு சட்டத்தினூடாக நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்தார்.

கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் நேற்று (05) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஏப்ரல் 13 ஆம் திகதியிலிருந்து இன்றுவரை (நேற்று வரை) 68 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் 67 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் 376 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளும் கைபற்றப்பட்டுள்ளது. அதற்கமைய, எதிர்காலத்தில் தொடர்ந்தும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படும்.

கடந்தக் காலங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் அடிப்படையில், நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் 28 திட்டமி டப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. அதற்கு மேலதிகமாக இன்னும் 44 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 94 பேர் கைது செய்யப்பட்டுள்ளன. இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களுக்காக பயன்படுத்திய மூன்று ரி- 56 துப்பாக்கிகள், மூன்று பிஸ்டோல் துப்பாக்கிகள், இதற்கு மேலதிகமாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஆறு துப்பாக்கிகளும் கைபற்றப்பட்டுள்ளன.

அதேபோன்று இந்த துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புப்படாவிட்டாலும் சட்டவிரோதமாக சமூகத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த 11 ரி – 56 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதற்கமைய, ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக 39 துப்பாக்கிகள் கைபற்றப்பட்டுள்ளன.

குற்றச்செயல்களில் ஈடுபடும் பிரதான பட்டியலிலுள்ள பாதாள குழு உறுப்பினர்கள் இலங்கைக்கு அப்பால் வெளிநாடுகளிலிருந்தே இந்த குற்றச்செயல்களை வழிநடத்துகிறார்கள். அவர்களை வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு அழைத்து வருவதற்கான இராஜதந்திர செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அதற்கமைய, கடந்த ஏழு மாத காலப்பகுதிக்குள் வெளிநாடுகளிலுள்ள 11 பாதாள குழு உறுப்பினர் களை நாட்டுக்கு அழைத்து வந்துள்ளோம். கடந்த வருடத்திலிருந்து இதுவரையில் 22 பேர் பாதாள குழு உறுப்பினர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள். அதற்கமைய, எம்மால் வழங்கப்பட்டுள்ள சிவப்பு எச்சரிக்கையின் பிரகாரம் ஏனைய நாடுகளில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள நபர்களையும் எமது நாட்டுக்கு அனுப்பி வைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை மட்டத்தில் இருக்கும் 20 இற்கும் அதிகமானவர்களையும் எதிர்காலத்தில் நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களை நாட்டு அழைத்து வந்ததன் பின்னர் அவர்களுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்படும் என்றார்.

## தேர்தல் பலப்பரீட்சை...

அதற்கமைய, நாடு முழுவதும் 13,759 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள் ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

339 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலேயே வாக்களிப்பு இடம்பெறும். அதற்கமைய, தொகுதி அடிப்படையில் 5,052 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள் என்பதுடன் பட்டியல் முறையினூடாக (போனஸ் ஆசனங்கள்) 3,235 பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படுவார்கள். மொத்தமாக 8,287 பிரதிநிதிகள் தெரிவு செய்யப் படுவார்கள்.

அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்கள் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள்ளேயே இருக்கிறார்கள். 3 இலட்சத்து 94 ஆயிரத்து 533 வாக்காளர்கள் இருக்கிறார்கள். மிக குறைந்த வாக்காளர்கள் எண்ணிக்கை கொண்ட உள்ளூராட்சி சபையாக அப்புத்தளை நகர சபை கருதப்படுகிறது. அந்த சபையில் 3,051 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்.

அதன் பிரகாரம் வாக்குச் சாவடிகளில் தேர்தல் கடமையில் ஈடுபடும் அதிகாரிகளை மற்றும் தேவையான பொருட்களை பெற்றுக் கொடுக்கும் பணிகள் நேற்று (05) நிறைவு செய்யப் பட்டிருந்ததுடன் முன்னாயத்த செயற்பாடுகளும் நிறவுசெய்யப்பட்டதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தொகுதி உதவி தெரிவத்தாட்சி அதிகாரியின் மேற்பார்வையில் கீழ் இந்த சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லும் போது தேசிய அடையாள அட்டை அல்லது அனுமதிப் பெற்ற அடையாள அட்டையொன்றை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதுடன் வாக்காளர் அட்டையை இன்று தபால் அலுவலகங்கள் அல்லது உப தபால் அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

**2 இலட்சம் அரச உத்தியோகத்தர்கள் கடமையில்**

இது தேசிய மட்ட தேர்தல் இலலை என்பதால் இம்முறைத் தேர்தலில் வெளிநாட்டு காண்காணிப் பாளர்கள் பங்குப்பற்றமாட்டார்கள் என்பதுடன உள்நாட்டு தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களான பெப்ரல், கெபே, ஐரிஸ், சி.எம்.இ.வி, வீவ் போன்ற நிறுவனங்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளன. அதற்கமைய, 4,000 இற்கும் அதிக எண்ணிக்கையிலான உள்நாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடு கின்றனர்.

இம்முறைத் தேர்தலில் தேர்தல் கடமைகளுக்காக 2,25,000 வரையான அரச உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

**வாக்காளர்களுக்கான விடுமுறை**

மூன்றாம் திகதி நள்ளிரவு 12 மணிமுதல் இன்று (06) வரை தேர்தல் அமைதிகாலமாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த காலபகுதிக்குள் தேர்தல் பிரசாரம், வேட்பாளர் ஒருவரை விளம்பரப்படுத்துதல் அல்லது இழிவுபடுத்தக் கூடாது என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித் துள்ளது.

வாக்காளர்கள், வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லும் தூரத்தின் அடிப்படையில் விடுமுறை பெற்றுக்கொடுப்பது நிறுவன பிரதானிகளின் பொறுப்பாகும். தனியார் துறையை பொறுத்தவரையில் 40 கிலோமீற்றர் அல்லது அதனை விட குறைவான தூரமென்றால் அரை நாள் விடுமுறையும் 40 – 100 மீற்றர் தூரத்துக்கு ஒரு நாள் விடுமுறையும் 100 – 150 கிலோமீற்றர் தூரத்துக்கு இடையில் ஒன்றரை நாள் விடுமுறையும் 150 கிலோமீற்றர் தூரத்துக்கும் அதிகமென்றால் இரண்டு நாள் விடுமுறையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மேலும், அரச மற்றும் தனியார் பல்கலைக்கழக பணியாளர் குழாம், மாணவர்கள், தனியார் உதவி வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர் கள், தொழிற்சாலை உள்ளிட்ட சகல தொழிற் சாலை பணியாளர்களுக்கும் விடுமுறை பெற்றுக்கொடுப்பது அந்தந்த நிறுவனங்களின் பொறுப்பாகும்.

**73,000 பொலிஸார் பாதுகாப்பு கடமையில்**

அதேபோன்று உள்ளூராட்சி தேர்தலுக்கான விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித் துள்ளது.

தேர்தல் பாதுகாப்பு கடமைகளுக்காகவும் நீதியான தேர்தலை நடத்துவதற்காகவும் 65, 000 இற்கும் அதிகமான பொலிஸ் அதிகாரிகள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதற்கமைய, 73,000 வரையான பொலிஸ் அதிகாரிகள் களத்தில் செயற்படுவதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனதுங்க தெரிவித்தார்.

இவர்கள் வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்பு, வீதி போக்குவரத்து கடமைகள், வாக்களிப்பு நிலையங்களை உள்ளடக்கும் வகையில் நடமாடும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கலகமடக்கும் பொலிஸாரும் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளதுடன், தற்போது வரையில் 564 தேர்தல் சட்ட முறைக்கேடு தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த முறைப்பாடுகள் குறித்து 54 வேட்பா ளர்களும் 204 ஆதரவாளர்களும் கைதுசெய் யப்பட்டு அவர்கள் தொடர்பில் சட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளது. தேர்தல் பின்னரான வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத் துவதற்காகவும் கலகமடக்கும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படை அதிகாரிகள் 2,337 பேர் கடமையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவசர நிலைமைகளின் போது முப்படைகளின் உதவியை பெற்றுக்கொள்வதற்காக முப்படையி னரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். 9, 906 சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிளும் பாதுகாப்பு கடமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி யுள்ளார்கள்.

வாக்களிப்பு இடம்பெறும்போது வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுமாக இருந்தால் அந்த செயற்பாடுகள் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு தேவையான பாதுகாப்பும் பெற்றுக்கொடுக்கப்படும்.

**எவ்வாறு சரியாக வாக்கு பிரயோகிப்பது?**

இந்தத் தேர்தலில் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தனித்தனி வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன. அந்த வாக்குச் சீட்டுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்களின் பெயர் உள்ளிடப்பட்டிருக்கும். அந்த பெயர்களின் எதிரில் அந்த கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அவற்றின் சின்னங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த சின்னத்துக்கு முன்னாள் இருக்கும் வெற்றுப் பெட்டியில் குறுக்கு கோடிட்டு வாக்களிக்க வேண்டும்.

குறுக்கு கோட்டுக்கு அப்பால் வாக்குச் சீட்டில் வரைதல், எழுதுதல், பெயர் எழுதுதல் போன்ற எந்தவொரு செயற்பாடும் மெற்கொள்ளக் கூடாது. அவ்வாறு செய்தால் அந்த வாக்கு நிராகரிக்கப்படும். அதேபோன்று விரும்பிய ஏதாவதொரு கட்சி அல்லது சுயதீன குழுவுக்கு மாத்திரமே வாக்களிக்க முடியும்.

**வாக்களிப்பு நிலையங்களில் செய்யக்கூடாதவை**

வாக்களிப்பு நிலையங்கள் அல்லது வாக் கெண்ணும் நிலையங்களில் கையடக்கத் தொலை பேசியை பயன்படுத்துதல், புகைப்படமெடுத்தல், வீடியோ படமெடுத்தல், ஆயுதங்களை தம்வசம் வைத்திருத்தல்,புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதுல் மற்றும் வேறு போதைப்பொருள் பயன்படுத்துதல், மதுபானம் அல்லது போதைப்பொருள் அருந்திவிட்டு வருதல் போன்ற செயற்பாடுகளை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.அதேபோன்று தேர்தல் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிக்கும் சந்தர்ப்பங்களை அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்களையும் புகைப்படமெடுத்தல், வீடியோ படமெடுத்தல் அல்லது சமூக ஊடக வலைத்தளங்களில் பதிவிடுதல் தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகும்.

# தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 23ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்** அரச உயர் அதிகாரிகளை வீணே பகைத்துக்கொள்ளாதீர்கள். ஆழம் அறியாது காலை விடாதீர்கள்.

**ரிஷபம்** உண்மையான உறவு என்ன என்பதை கற்றுக்கொள்ளப்போகின் றீர்கள். முயற்சிகள் எடுத்தாலும் தடைகள் உண்டு.

**மிதுனம்** மற்றவர்கள் முடியாது என்று கைவிட்ட செயலை இலகுவில் முடித்துக் காட்டுவீர்கள். நண்பர்கள் உதவுவார்கள்.

**கடகம்** குடும்பத்துக்கான செலவு களை இன்று நீங்கள் பொறுப்பேற்பீர்கள். குதர்க்க வாத விவாதங்களைத் தவிருங்கள்.

**சிம்மம்** உங்கள் உடல் இன்று ஆரோக் கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். புகழ் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கன்னி** கணவன் - மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். உணவு, உறக்கம் தடைப்படும் நாள்.

**துலாம்** அரசாங்க வகையில் பல சலுகை கள் நீங்கள் கேட்காமலேயே கிடைக்கும். மூத்தவர்களின் ஆலோசனைகளை ஏற்பீர்கள்.

**விருச்சிகம்** தொழில், வியாபாரத்தில் அதிக இலாபங்களை அடைவீர்கள். நீங்கள் விரும்பிய தொழில் மாற்றம் அமையும்.

**தனுசு** ஆலய தரிசனத்தால் மன நிறைவு அடைவீர்கள். பட்டக்கல்வி குறித்து நல்ல முடிவை எடுப்பீர்கள்.

**மகரம்** கடவுள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். மனதைக் கெடுத்துக் கொள்ளாது அமைதி யாக இருங்கள்.

**கும்பம்** எதிர்பாராத வகையில் உங்கள் புகழ், அந்தஸ்து உயரப் போகின்றது. அரச வகையில் இலாபம் உண்டு.

**மீனம்** கலங்கிப்போயிருந்த மனம் ஆறுதலடையப் போகின்றது. இன்றைய நாள் உங்களுடையது நல்லதையே நினையுங்கள்.

| | |
|---|---|
| **திதி:** | நவமி மு.ப. 8.38 வரை பின் தசமி |
| **நட்சத்திரம்:** | மகம் பி.ப. 3.51 வரை பின் பூரம் |
| **பிறை:** | வளர்பிறை |
| **யோகம்:** | மரண யோகம் முழுவதும் |
| **வார சூலை:** | வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்:** | காலை - 7.55 – 8.55 மணி வரை<br>பகல் - 11.55 – 12.55 மணி வரை<br>மாலை - 3.55 – 5.55 மணி வரை |
| **ராகு காலம்:** | 2.55 – 4.25 மணி வரை |
| **எமகண்டம்:** | 8.55– 10.25 மணி வரை |
| **குளிகை:** | 11.55– 1.25 மணி வரை |
| **சந்திராஷ்டமம்:** | மகர ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பிற்பகல் 3.51 மணி வரை**
பரணி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று பிற்பகல் 3.51 மணிக்கு மேல்**
அஸ்வினி, கார்த்திகை, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம்,உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், போட்டி, தேர்வுகளில் வெற்றி, தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# வியட்நாம் ஜனாதிபதியை சந்தித்தார் அநுர







வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் நேற்று (05) அமோக வரவேற்பளித்தார்.

வியட்நாம் ஜனாதிபதி மாளிகைக்கு நேற்று (05) முற்பகல் விஜயம் செய்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, முப்படைகளின் மரியாதையுடன் வரவேற்கப்பட்டதுடன், முப்படைகளின் அணிவகுப்பையும் பார்வையிட்டார்.

வரவேற்பு நிகழ்வில், இரு தலைவர்களும் இலங்கை மற்றும் வியட்நாமின் தேசிய கீதங்களுக்கு மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து இரு நாடுகளின் பிரதிநிதிகளும் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து, இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தச் சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையிலான முன்னேற்ற மீளாய்வு, எதிர்கால ஒத்துழைப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப் பட்டன.

இந்தப் பயணத்தின் மூலம் அரசியல் நம்பிக்கையை மேம்படுத்துவதோடு, இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு துறைகளில் நடைமுறை மற்றும் செயற்திறன்மிக்க ஒத்துழைப்பை மேலும் ஊக்குவிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

1970ஆம் ஆண்டு இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியதிலிருந்து வியட்நாமும் இலங்கையும் வலுவான மற்றும் தொடர்ச்சியான உறவுகளைப் பேணி வருகின்றன.

இலங்கை மற்றும் வியட்நாமின் வருடாந்த இருதரப்பு வர்த்தகம், முக்கியமாக ஏற்றுமதிகள், சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை எட்டியுள்ளது.

எதிர்வரும் வருடங்களில் இருதரப்பு வர்த்தகத்தை 01 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிப்பதை இரு தரப்பினரும் இலக்காகக் கொண்டுள்ளனர்.

இந்த ஆண்டு வியட்நாமும் இலங்கையும் இராஜதந்திர உறவுகளின் 55ஆவது ஆண்டைக் கொண்டாடும் வேளையில், பரஸ்பர நம்பிக்கை மற்றும் பகிரப்பட்ட அபிவிருத்தி இலக்குகளை பயன்படுத்தி உறவுகளை மேலும் வலுப்படுத்த இருநாடுகளும் தயாராகவுள்ளன.

ஜனாதிபதி திசாநாயக்கவின் விஜயம், வியட்நாமுடனான பாரம்பரிய நட்புறவுக்கான இலங்கையின் வலுவான அர்ப்பணிப்பை வலியுறுத்துவதோடு, டிஜிட்டல் பரிமாற்றம், டிஜிட்டல் பொருளாதாரம், வலுசக்தி மாற்றம், செயற்கை நுண்ணறிவு மற்றும் பாரம்பரிய துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கும் புதிய ஈடுபாட்டு வழிகளைத் திறப்பதற்கும் பகிரப்பட்ட உறுதியை இது பிரதிபலிக்கிறது.

# ஐரோப்பிய ஒன்றிய இராஜதந்திரக் குழு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சந்திப்பு





இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் தலைமையிலான இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இராஜதந்திரக் குழுவினருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று (05) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ (H.E. Carmen Moreno), ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிராந்தியத் தலைவர் சார்ள்ஸ் வைட்லே, ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் துணைத் தலைவர் லார்ஸ் பிரெடெல், ஐரோப்பிய ஆணையத்தின் கொள்கை அதிகாரி கைடோ டொலாரா, ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் இலங்கைக்கான பிரதிநிதி திருமதி கலிஜா அகிசேவா, ஐரோப்பிய ஆணையத்தின் கொள்கை அதிகாரி பார்டோஸ் விளாடிஸ்லாவ் ஒட்டாச்செல் மற்றும் ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் கொள்கை அதிகாரி திருமதி மைக்கேல் டோடினி உள்ளிட்டவர்கள் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இங்கு இரு தரப்பினரும் நாட்டின் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து விரிவாகக் கவனம் செலுத்தினர். மேலும், GSP+ சலுகையை மேலும் மேம்படுத்துவதில் கவனம் செலுத்திய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கையின் ஆடைகள் உட்பட ஏற்றுமதிப் பொருட்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்தார். நாட்டின் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும் அமெரிக்கா நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு விதிக்கப்படும் 44% பரஸ்பர வரியின் தாக்கத்தைக் குறைப்பதற்கும் இதனால் முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப் படுத்தி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான வைத்தியர் காவிந்த ஜயவர்தன, எஸ்.எம்.மரிக்கார், முஜிபுர் ரஹ்மான் மற்றும் பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம, பேராசிரியர் கெணடி குணவர்தன, பேராசிரியர் திருமதி சந்திமா விஜேகுணவர்தன, கலாநிதி மஹிம் மெண்டிஸ், கலாநிதி அதுலசிறி சமரகோன், கலாநிதி நதீஷா டி சில்வா, சுரங்க ரணசிங்க, குசும் விஜேதிலக மற்றும் திலும் அழகியவன்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

# விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மீட்ட நகைகளைப் பரிசோதித்து அறிக்கைப்படுத்த உத்தரவு

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டிலிருந்து மீட்கப்பட்டவையெனக் கூறப்படும் தங்க நகைகளைப் பரிசோதித்து அறிக்கைப்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான நடவடிக்கையின்போது மீட்கப்பட்டு புலனாய்வுப் பணிப்பாளர் சபையில் வைக்கப்பட்டுள்ள குறித்த தங்க நகைகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், அந்த நகைகளை தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபைக்கு அனுப்பிச் பரீட்சித்து அறிக்கைப்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சார்பாக விடுக்கப்பட்ட கோரிக்கையைப் பரிசீலித்த பின்னர் கொழும்பு நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பஸ்ஸுடன் முச்சக்கரவண்டி மோதி விபத்து

## ஒருவர் பலி – மற்றுமொருவர் காயம் – பஸ் சாரதி கைது



தனியார் பஸ், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ள நிலையில், பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஏ9 வீதியில் அநுராதபுரம், ரம்பாவ, கங்காராம விஹாரைக்கு அருகாமையில் நேற்று (05) பிற்பகல் இடம்பெற்ற இவ்விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் உயிரிழந்துள்ளதுடன், முச்சக்கரவண்டி சாரதி படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் மிஹிந்தலை வீதி ரம்பாவ பகுதியில் வசித்துவரும் இளங்கசிறி விதானலாகே நிமல் சுபசிங்க எனும் 75 வயதுடையவரென அடையாளம் காணப்பட்டுள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தில் இக்கிரிகொல்லாவ, வஹமல்கொல்லாவ பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய முச்சக்கரவண்டி சாரதி ஒருவரே காயமடைந்துள்ளார்.

உயிரிழந்த நபர், மோட்டார் சைக்கிளில் ரம்பாவ நகரிலிருந்து மதவாச்சி நோக்கி பயணித்துக்கொண்டிருந்தபோது பின்னால் வேகமாக வந்த தனியார் பஸ் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியதோடு, பின்னர் வீதியை விட்டு விலகிச்சென்று வீதியோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியுடனும் மோதியுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய 46 வயதுடைய மடாட்டுகம பகுதியைச் சேர்ந்த தனியார் பஸ் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உள்ளூராட்சித் தேர்தல் விதிமீறல்கள் அதிகரிப்பு

## இதுவரை 4,628 முறைப்பாடுகள் பதிவு

உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில் இதுவரை 4,628 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 35 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் 289 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த 04 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதெனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளே இதுவரை அதிகமாக கிடைக்கப்பெற்றுள்ளன. அது 4,284ஆக பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில் இதுவரையான முறைப்பாடுகளில் 3,825 முறைப்பாடு களுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 803 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும், தேர்தல் விதிமீறல்கள் குறித்து தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 456 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 4,172 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.




Election Commission
MEDIA RELEASE
2025.05.05

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| [illegible] | 01 | 34 | 07 | 42 |
| [illegible] | 03 | 226 | 18 | 247 |
| [illegible] | 04 | 260 | 25 | 289 |

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| [illegible] | 04 | 392 | 60 | 456 |
| [illegible] | 31 | 3892 | 249 | 4172 |
| [illegible] | 35 | 4284 | 309 | 4628 |

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| [illegible] | 456 | 320 | 136 |
| [illegible] | 4172 | 3505 | 667 |
| [illegible] | 4628 | 3825 | 803 |

# தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் அனைவருக்கும் தேர்தல் ஆணைக்குழு விசேட அறிவிப்பு



உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல், இன்று 06ஆம் திகதி நடைபெறும். தேர்தலை பக்கச்சார்பின்றியும் திறம்படவும் நடத்தும் கௌரவமான வரலாறொன்றைக் கொண்ட அரச ஊழியர் களுக்கு இத்தேர்தல் பணி பற்றிய பொறுப்பு ஒப்படைக்கப் பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து நேற்று (05) ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இத்தேர்தலின்போது தமக்குரிய செயற்பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றும் பொருட்டு அரசிடமிருந்து நாளாந்த ஊதியம் பெறுகின்ற உதவியாளர்கள் முதல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் வரை தேர்தல் கடமைகளில் ஈடுபடுகின்ற அரச ஊழியர் ஒவ்வொருவரும் தனது பொறுப்பு குறித்த சிறந்த புரிந்துணர்வுடனும் கூர்ந்த கவனத்துடனும் எவருக்கும் விசேட கவனிப்பை வழங்காமலும் பக்கச்சார்பின்றியும் செயலாற்றுவார்கள் என்று தேர்தல் ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது.

தேர்தல் நடைபெறும் தினத்தில் வாக்காளர் ஒவ்வொருவரும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவரும் தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பொறுப்பு குறித்து நம்பிக்கை வைத்துள்ளனர். தேர்தலின்போது உங்களுக்குரிய செயற்பொறுப்பு குறித்து கருதும்போது, குறிப்பாக, தேர்தல் நடைபெறும் காலப்பகுதியினுள் வாக்காளர்களுடனும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடனும் அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுடனும் தாங்கள் நட்புறவுடன் நடந்துகொள்ள வேண்டும். அவர்களுடன் செயலாற்றும்போது தயவுசெய்து அர்த்தமுள்ள விதத்திலும் தயவன்புடனும் சகிப்புத்தன்மையுடனும் செயலாற்றவும். இவ்வாறான ஒரு காலகட்டத்தில் திறம்படவும் சுறுசுறுப்பாகவும் பரஸ்பர தொடர்பைப் பேணும்போது சாமர்த்தியமும் இங்கிதமும் தொழில்சார் அடக்கமும் இன்றியமையாப் பண்புகளாக விளங்குகின்றன.

தேர்தலொன்றின்போது ஒப்படைக்கப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட கடமையை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு அரச அலுவலர்கள் என்ற வகையில் இந்நாட்டின் வாக்காளர்களுக்கு நாம் கடப்பட்டுள்ளோம். தேர்தல் ஆணைக்குழுவுக்கும் நீதிமன்றத்துக்கும் மாத்திரமே நீங்கள் பொறுப்புக் கூறவேண்டும். எவருக்கும் விசேட கவனிப்பை வழங்க வேண்டாம். உமது கடமை ரீதியான பக்கச்சார்பின்மையானது தீர்க்கமானதாக் இருக்கும்.

ஆகையால், வாக்காளர்கள் அரச அலுவலர் களிடமிருந்து எதிர்பார்க்கின்ற செயற்பொறுப்பை உயர்ந்தபட்சம் நிறைவேற்றுவோம். அதன்மூலம் சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு சூழலில் தமது மனச்சாட்சிக்கொப்ப வாக்களிக்க வாய்ப்புள்ளது என்பதை பொதுமக்கள் கண்டுணர்வதுடன், மாத்திரமன்றி அதனைப் புரிந்தும் கொள்வார்கள்.

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மே 06 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# மாணவி குடும்பத்தினருக்கு நீதி கிடைக்க வேண்டும்!

கொழும்பிலுள்ள பிரபல தமிழ் பாடசாலையொன்றின் மாணவி தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்திருக்கும் செய்தி தற்போது சமூகத்தில் பேசுபொருளாகியுள்ளது.

பாடசாலையில் ஆசிரியர் ஒருவரால் பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாகி சம்பந்தப்பட்ட மாணவி மன உளைச்சலில் இருந்ததாகத் தகவலொன்று கூறுகிறது. ஆனால், ஆசிரியர் மீது பொலிஸ் விசாரணைகள் நடந்தாலும் அவர் அப்படி துன்புறுத்தல்களைச் செய்ததாக சாட்சியம் இல்லாததால் விடுவிக்கப்பட்டதாகவும் இது அபகீர்த்தியை ஏற்படுத்தும் ஒரு செயற்பாடென்றும் பாடசாலைச் சமூகம் கூறுகிறது.

ஆனால், தனது மகளுக்கு அநீதி நடந்துள்ளதாகவும் மகளின் மன உளைச்சலுக்கு காரணமானவர்கள் சுதந்திரமாக இருப்பதில் தமது மகளுக்கு உடன்பாடு இருந்ததில்லையென்றும் மரணித்த மாணவியின் பெற்றோர் கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கின்றனர். இந்தத் துயரம் மற்றுமொரு மாணவிக்கு நடந்துவிடக் கூடாது என்பதில் தனது மகள் உறுதியாக இருந்தாரென்றும் பாடசாலையிலிருந்து மகள் வேறொரு பாடசாலைக்கு மாற்றப்பட்டாலும் அவரை சமூகம் விமர்சித்த விதம் அவரை இந்தத் தீர்மானத்துக்கு தள்ளியிருப்பதாகவும் பெற்றோர்கள் சுட்டிக்காட்டியதைக் காணமுடிந்தது.

பொறுப்பான ஊடகம் என்ற வகையில் இந்த விவகாரத்தில் யார் சரி, யார் தவறு என்ற தீர்ப்பை வழங்குவது எமது நோக்கமல்ல. ஆனாலும், சமூகத்தின் முன்னிலையிலுள்ள இந்த விடயத்தில் சில காரணிகளைச் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது. இந்த விவகாரம் சமூக ஊடகங்களின் ஊடாகவோ அல்லது வாய்ச்சண்டைகளிலாலோ தீர்க்கப்படவேண்டிய ஒன்றல்ல. சம்பந்தப்பட்ட மாணவியின் உயிர் மிகவும் பெறுமதியானது. அது நீத்திருக்கப்படக் கூடாது. குறிப்பிட்ட மாணவி தவறே செய்திருந்தாலும் கூட அவரை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி அவரை ஒதுக்கி வைக்க எவருக்கும் அதிகாரம் இல்லை. சட்டத்தை, நீதியை நிலைநாட்டுவோரைத் தவிர வேறு எவரும் அப்படிச் செய்யவும் முடியாது. இதனால், இந்த விடயத்தில் அந்த மாணவி சார்ந்திருந்த பாடசாலை மற்றும் வட்டாரங்கள் பொறுப்புக்கூறவேண்டியவர்களாகின்றன .

குறிப்பிட்ட மாணவி பாடசாலையிலிருந்து வெளியேறி புதிய பாடசாலைக்குச் சென்ற பின்னர் புதிய பாடசாலையிலும் அந்த மாணவி தொடர்பில் அவதூறுகள் பரப்பப்பட்டதாகத் தகவல்கள் சொல்கின்றன. அப்படியான அவதூறுகளைப் பரப்புவதன் மூலம் அதனை பின்னணியில் இருந்து செய்தவர்கள் எதனை எதிர்பார்த்தனர் என்பது தெரியவில்லை. சம்பந்தப்பட்ட மாணவி பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாகியிருந்த விடயம் கொஞ்சப்பேருக்கே தெரிந்திருந்த போதும் அவர்கள் இது விடயத்தில் துணிச்சலான முடிவுகளை எடுக்காமையும் இங்கே வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது.

மேற்படி விடயம் சம்பந்தமாக சமூக ஊடகங்களில் கருத்திடும் பெற்றோர்கள் பலர் இந்த விவகாரத்தில் பேசப்படும் கணித ஆசிரியர் குறித்தும் அவரின் செயற்பாடுகள் குறித்தும் சிலாகித்துப் பேசுகின்றனர். உண்மையில் அவர் பக்கம் தவறு இல்லையெனில் அவராகவே சட்டத்தின் உதவியை முதலில் நாடியிருக்கலாமல்லவா? பாடசாலையின் பெயரும் இதனுடன் பேசப்படுவதால் இந்த விடயத்தில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்து பாடசாலையின் பெயரை க்ளியர் செய்யவேண்டியது பாடசாலைச் சமூகத்தினதும் பொறுப்பல்லவா? அதனை அவர்கள் செய்யாதபடியால் நெருப்பில்லாமல் புகையாது என்ற கருதுகோலுக்கு வர முடிகிறது.

கொழும்பு பாடசாலை மாணவியின் இந்தத் துர்ப்பாக்கிய மரணத்தை பொறுப்புவாய்ந்த எவரும் இலகுவில் கடந்துசெல்ல முடியாது. பாலியல் துன்புறுத்தல்கள் என்பன உடல் ரீதியான துன்புறுத்தல்கள் மட்டுமல்ல. வார்த்தைகளாலும் ஒருவரைக் காயப்படுத்துவது துன்புறுத்தலின் வகையே. பாடசாலைக்கு மாணவர்களை அனுப்பும் பெற்றோர் அந்தப் பாடசாலை ஆசிரியர்களை தெய்வங்களாகவே நம்புகின்றனர். எந்தவொரு பெற்றோரும் பாடசாலை ஆசிரியர்களை துஷ்டராக, அயோக்கியர்களாகப் பார்ப்பதில்லை. அதனால் தான் மாதா,பிதா, குரு,தெய்வம் என்று தெய்வத்துக்கு முன்னதாக குருவை வைத்திருக்கிறார்கள். அப்படியான குரு இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுவது மாண்புடையதா?

அதேவேளை, அப்படி நடந்துகொண்ட ஒருவரைக் காப்பாற்ற முனைவதும் தார்மீகமானதா? இந்தச் சம்பவத்தை பெரிதுபடுத்தினால் பாடசாலையின் பெயர் கெட்டுவிடும் என்று அடக்கி வாசிக்கும் பாடசாலைக் கல்விச் சமூகம், தம் பக்கம் தவறு இல்லையேல் இது தொடர்பான விசாரணைகள் நடந்து நீதியை நிலைநாட்டுங்கள் என்று கோரத் தவறுவதேன்?

இந்தச் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும். மாணவியின் இறப்புக்கான தூண்டுதலைச் செய்தவர்கள் தொடர்பில் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட மாணவி சென்ற பிரத்தியேக வகுப்பின் ஆசிரியர் வழங்கிய மன உளைச்சல் தொடர்பில் சில கருத்துகள் வெளிவந்துள்ளதால் அது தொடர்பிலும் தனியே விசாரணை நடத்தப்படவேண்டும். சம்பந்தப்பட்ட பிரத்தியேக வகுப்பின் உரிமையாளரான ஆசிரியர் தற்போதைய அரசாங்கத்தின் மிக நெருக்கமான பிரமுகர் என்பதால் இந்த விசாரணைகள் மந்த கதியில் இடம்பெறுவதாகவும் அறியமுடிகிறது. ஆனால், அது அப்படி மூடிமறைக்கப்பட்டுவிடக்கூடாது.

இந்த விடயத்தில் உயிரிழந்த மாணவியின் குடும்பத்துக்கு நீதி வழங்கப்படவேண்டும். அதற்கு காரணமானவர்கள் எந்தத் தராதரத்தில் இருந்தாலும் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும். இந்த விடயத்தில் அதிகார துஷ்பிரயோகம் இல்லாத, நீதி நிலைநாட்டப்படும் நாடு என்று வார்த்தைக்கு வார்த்தை கூறும் ஜனாதிபதி அநுரகுமாரவினதும் பிரதமரும் கல்வியமைச்சருமான ஹரிணியினதும் நிலைப்பாடு என்னவென்பதை அறிய தமிழ்ச் சமூகம் ஆவலுடன் காத்துநிற்கின்றது.






# வாக்களிப்பது நமது உரிமை!

**சிவகுமார் திவியா**

எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்காக ஐந்து ஆண்டுகள் யார் உழைக்கப்போகிறார்கள் என்பதைத் தீர்மானித்து வாக்களிப்பதென்பது ஒவ்வொருவரினதும் தலையாய கடமை என்பதுடன் இந்தப் பிரதேசத்தின் தலையெழுத்தைத் தீர்மானிக்கக்கூடிய வலிமையுள்ள எஜமானர்களும் வாக்காளர்கள் தான்.

இவ் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சுமார் 7 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று மே மாதம் 06ஆம் திகதி நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது.

கொவிட் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, நிதிப் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்ச்சியாகப் பிற்போடப்பட்டு வந்திருந்த சூழ்நிலையில், இன்று தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

அத்துடன், இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக 17,296,330 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை விடவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு 1,55,976 மேலதிக வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் .

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 18 வயதைப் பூர்த்தி செய்யும் அனைத்து பிரஜைகளும் இம்முறை தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெறுவார்கள் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.

இத்தேர்தலில் 341 உள்ளூராட்சி மன்றங்களில் 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள், 275 பிரதேச சபைகள் உள்ளிட்ட 339 உள்ளூராட்சி சபைகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பர். 8000க்கும் அதிகமான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்காக இந்தத் தேர்தல் நடத்தப்படுகின்றது.

உள்ளூராட்சி பிரதேசங்களில் பிரதேச மட்டத்திலும் பொதுப் பட்டியலின் அடிப்படையிலும் மக்கள் பிரதிநிதிகள் கலப்பு விகிதாசார முறையில் சனத் தொகை, நிலப்பரப்பு, இன அடிப்படை ஒற்றைப் பிரிவு மற்றும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 4,750 ஒற்றை உறுப்பினர் பிரிவுகளும் 165 இரண்டு உறுப்பினர் பிரிவுகளும் 04 மூன்று உறுப்பினர் பிரிவுகளும் உள்ளன.

இவ் உள்ளூராட்சித் தேர்தலின் முக்கியத்துவமும் அறியாத மக்கள் எதிர்கொள்ளும் சவால்களும் அதிகம். ஒரு சமூகத்தின் அடிப்படைத் தளமாகக் கருதப்படும் ஊருக்கான ஆட்சி அதிகாரமே இந்தத் தேர்தலின் அடிப்படை. ஓர் ஊரின், அதன் வட்டாரத்தின் நலனில் அக்கறை கொண்ட ஒரு பிரதிநிதி மக்களால் தெரிவு செய்யப்படும் போது அந்தப் பிரதிநிதி அந்தப் பகுதியின் பொருளாதார அபிவிருத்தி, நிர்வாகம், உட்கட்டமைப்பு என்பவற்றை பிரதானமாக முறைப்படுத்தும் கடமைப்பாடு அவருக்கு உள்ளது.

அதேவேளை, கல்வி, சமூக ஒழுங்கு, வேலைவாய்ப்பு உருவாக்கம், பண்பாட்டு நிகழ்வுகளை ஊக்குவித்தல், பெண்கள் வலுவூட்டல், பொருளாதார ரீதியாகப் பின்தங்கியோருக்கான நிவாரணம் என்னும் வகையில் பல விடயங்களில் செல்வாக்குச் செலுத்த முடியும். உள்ளூராட்சி மன்றங்களுக்கென ஒதுக்கப்படும் நிதியும் அதற்கான அதிகார எல்லைகளுக்குள்ளும் நின்று இந்தப் பணிகளில் பலவற்றை நிறைவேற்றுவது தான் மக்களால் தெரிவு செய்யப்படுபவர்களின் கடமைகளாகும்.

தமிழ் மக்களின் இன்றைய அரசியல் பிரதிநிதித்துவம் எப்படி, தமிழரின் தேசிய உணர்வுகளில் பிழைப்பு நடத்துகிறதென்பதற்கு புதிதாக விளக்கம் எதுவும் தேவையில்லை. ஆனால், பல குறைபாடுகள் இருப்பினும், இந்த உள்ளூர் தமிழ் பிரதிநிதித்துவமும் கூட அரசியல் கட்சிகள், அரசியல் பிரமுகர்களின் பிடிகளுக்குள் சிக்குப்பட்டு ஒரு பாராளுமன்றத் தேர்தல் வடிவம் பெற்றிருப்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

கிராமங்களில், நகரங்களில், புறநகர்ப் பகுதிகளில் மக்கள் தங்களுக்குத் தேவையான வகையில் அமைப்புகளை உருவாக்கி வாழ்வதும் தமது பகுதி சார்ந்த விடயங்கள் தொடர்பான விழிப்புணர்வும் தேவையான கோரிக்கைகளை சரியான இடங்களுக்கு கொண்டு சென்று சாதிப்பதற்கான சமூக வளர்ச்சியைக் கொண்டிருப்பதும் அவசியமான ஒன்றாகும். இந்த வளர்ச்சி என்பது உள்ளூர் தலைமைகள், அரசியல் தலைமைகள் மூலம் ஊக்குவிக்கப்பட்டு படிப்படியாகக் கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இதுவரைகால தமிழ் உள்ளூர் தலைமைகளும் அரசியல் தலைமைகளும் செய்தவை தான் என்ன என்ற விசனம் தமிழர்கள் மத்தியில் எழுகிறது. உள்ளூர் தலைமைகளில் சில தனிநபர்களின் ஊர் தொடர்பான பல அர்ப்பணிப்புகளும் பகுதி முன்னேற்றத்துக்கான உழைப்புகளையும் மறுப்பதற்கில்லை. இப்படிப்பட்ட தனிநபர்களின் உண்மையான உழைப்பை நாம் ஆயுதப் போராட்ட காலத்துக்கு முன்பு ஒரு வடிவத்திலும் போராட்ட காலகட்டத்தில் வேறொரு வடிவத்திலும் தற்போது காலத்துக்கேற்ற வடிவத்திலும் காண்கிறோம்.

தமிழ் மக்கள் மத்தியில் சரியான உள்ளூர் தலைமைகள் இல்லாமல் இல்லை. ஆனால், அது முறையாக வளர்த்தெடுக்கப்படாத, பெரியளவு முதிர்ச்சி கண்டிராத, தமது பகுதி மக்களின் கட்டமைப்புகளின் தன்மைக்கேற்ப தன்னியல்பான தாகவும் பலவீனமானதாகவும் இருப்பது தான் இதன் பிரதான பிரச்சினையாகும்.

தமிழ்ச் சமூகத்தின் பலவீனங்களாக சாதியம், பாலின சமத்துவமின்மை பிராந்திய, பிரதேச வேறுபாடுகள் என்பன உள்ள சூழலில் சுமுகமாகச் சிந்திக்கும் தன்மைகள் குறைவடைந்து ஒவ்வொருவரும் தான் சார்ந்து சிந்திக்கும் போக்கு வளர்த்துவிடப்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளைக் கட்டிக் காப்பதிலும் வளர்த்து விடுவதிலும் தமிழ் அரசியல் சமூகத் தலைமைகளுக்கும் பௌத்த- சிங்கள அதிகாரத் தலைமைகளுக்கும் பெரும் பங்கிருக்கிறது.

உள்ளூராட்சி மன்ற பிரதிநிதித்துவத்தை அரசியல் சாக்கடையாக மாற்றுவதிலும் தனிநபர் போட்டி மற்றும் குழிபறிப்புகளாக மாற்றுவதிலும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் பெரும்பங்கு இருக்கிறது.

தமிழ் மக்கள் தமது தேசிய உரிமைகளுக்காகப் போராடிய காலங்களில் இருந்து இலங்கை அரச ஒத்தோடிகளாக இருந்து வரும் கனவான்களும் போலி தலித்தியம் பேசி ஒடுக்கப்படும் சாதிப் பிரிவு மக்களை இழிவுபடுத்தும் பிரிவுகளும் பிரதேசவாதம் பேசி பிரதேச தியாகிகளாகத் தம்மைக் காட்டிக்கொள்ள விளையும் சக்திகள், போலி இடதுசாரிகள் பிரிவு அடிப்படையில் ஏக்கியராட்சிய என்னும் உள் அரசியலுடன் இலங்கை தேசியக் கட்சிகளுக்கு ஆதரவாகவும் என பல தரப்புகள் தமிழ் மக்களுக்கெதிரான வழியில் இந்த உள்ளூராட்சித் தேர்தல் கால கட்டத்திலும் செயலாற்றத் தவறவில்லை.

தமிழ் மக்களின் ஊர்களிலும் அவர்களது அரசியல் தலைமையிலும் காணப்படும் இந்தப் பலவீனங்களைப் பயன்படுத்திக் கொண்டு குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க வந்தோரை அடையாளம் காணவேண்டும்.



தமிழ் மக்களின் சமூக ஏக்கங்களை அரசியல் அறுவடை செய்வதும் அரசியல் தலைமையின் தவறுகள் பலவீனங்களைக் கணிப்பீடு செய்து சந்தர்ப்பவாதமாக மீட்பர் வேடம் போடுவதும் அவர்களின் கபடம் நிறைந்த அரசியல் அணுகுமுறை என்பதை தமிழ் மக்கள் உணர்வது அவசியம்.

எம்மை அழிப்பதற்கு முழுமையாக தோள் கொடுத்து நின்ற இரத்தக்கறை படிந்த இவர்கள் அதிகாரத்தில் இருக்கும் வசதியைப் பயன்படுத்தி எமது பகுதிகளில் சில தமிழ் பிரதிநிதிகளைக் கண்டறிந்திருப்பதன் மூலம் எமது உண்மையான பிரதிநிதிகளாக ஆகிவிட முடியாது.

தமிழ் கட்சிகள், பிரமுகர்களை கடந்து உங்கள் பகுதிக்கு உண்மையாக உழைக்கக்கூடிய உங்களில் ஒருவரைத் தேர்தெடுக்கவேண்டிய தேர்தல் களம் இது.

இது பாரளுமன்ற அரசியலிலிருந்து மாறுபட்ட எமது ஊர்களுக்கான அதிகாரம் என்னும் வகையில் இதை ஒருபோதும் எம்மை ஏமாற்றி சிதைத்துவரும் தவறானவர்களின் கைகளில் கொடுத்துவிடுவதென்பது யுத்தத்துக்கு பிந்தைய எமது சமூகத்துக்கு மீளமுடியாத பாதிப்புகளைத் தொடர்ந்து தரக்கூடியது என்பதை தமிழராகிய நாம் நினைவில் கொண்டு இந்தத் தேர்தலை எதிர்கொள்வோம்.

வாக்களிக்காமல் வீட்டிலேயே உட்கார்ந்திருந்தால் சாக்கடை சரியில்லை, சாலை சரியில்லை என்று புலம்பினால் சரியாகி விடுமா? சரி, வாக்களித்தால் மட்டும் இவை எல்லாம் சரியாகி விடுமா? ஆமாம், நாம் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள்தான், மக்கள் அரசின் திட்டங்களைத் தான் தேர்ந்தெடுத்த பகுதிகளுக்குக் கொண்டு வருவார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

வாக்குரிமை என்பது மனிதனின் அடிப்படை உரிமையாகும். ஆனால், அதனைக் கட்டாயமாக்க முடியாது. ஏனெனில், வாக்களிப்பது எப்படி ஒருவரின் உரிமையோ அதே போன்று வாக்களிக்காமல் இருப்பதும் அவரின் உரிமையே. தெரிந்தவர் அறிந்தவர் என்பதனையும் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதையும் கடந்து யாருக்கு வாக்களிப்பதென்று முடிவை எடுங்கள். உங்கள் பிரதேசங்களை வட்டாரங்களை மேம்படுத்தக்கூடியவர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குங்கள்.

## இன்றைய நாளில்...

- 1757 – பர்மிய உள்நாட்டுப் போர் (1740–1757) முடிவுக்கு வந்தது.
- 1853 – 'த லிட்டரரி மிரர்' என்னும் ஆங்கில மாத இதழை யாழ்ப்பாணத்தில் வைமன் கதிரவேற்பிள்ளை ஆரம்பித்தார் .
- 1854 – இந்தியாவில் முதல் தபால் தலை வெளியிடப்பட்டது.
- 1889 – ஈபெல் கோபுரம் பாரிஸில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.
- 1967 – சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முஸ்லிம் குடியரசுத் தலைவரானார்.

## நக்கல் நமசிவாயம்



# இலங்கையில் முதலீடு செய்ய வியட்நாம் வின்குருப் குழுமத்துக்கு ஜனாதிபதி அழைப்பு



வியட்நாமுக்கு அரச விஜயம் மேற் கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நேற்று முன்தினம் (04) பிற்பகல் வியட்நாமிலுள்ள வின்குருப் (Vingroup) குழுமத்தின் உயர் நிர்வாகத்தினரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

வின்குருப் (Vingroup) குழும தலைமையகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது இலங்கையில் ஆதன வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் முதலீடு செய்யுமாறு வின்குருப் குழுமத்துக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

வின்குருப் நிறுவனத்தின் வெற்றி மற்றும் பல்வகைப்பட்ட உலகளாவிய வர்த்தகநாமங்களின் உருவாக்கத்துக்கும் வாழ்த்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இலங்கையில் முதலீட்டுக்கு நெகிழ்வான மற்றும் உகந்த சூழலை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் தயாராகவுள்ளதென்றும் தெரிவித்தார்.

இலங்கையின் மூலோபாய புவியியல் இருப்பிடம், முற்போக்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் குறிப்பாக, சுற்றுலாத்துறை, ஆதன வர்த்தகம் ஆகிய அதிக திறன் கொண்ட துறைகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

டெக்னொகொம் கோர்ப்பரேஷன் (Technocom Corporation) என்று முன்னர் அழைக்கப்பட்ட வின்குருப் (Vingroup) கூட்டு பங்கு நிறுவனம்,1993 இல் உக்ரைனில் நிறுவப் பட்டது. தற்போது, வின்குருப் (Vingroup) வியட்நாமில் மிகப் பாரிய மற்றும் மிகவும் மதிப்புமிக்க தனியார் நிறுவனங்களில் ஒன்றாகும்.

இக்கலந்துரையாடலில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், வின்குருப் (Vingroup) குழுமத்தின் உப தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி வியட் குவாங் (Viet Quang) எனும் இரு நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

# ஹோ சி மின் கல்லறை - போர்வீரர்கள் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய ஜனாதிபதி





வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நேற்று (05) முற்பகல் ஹனோயில் உள்ள போர் வீரர்கள் நினைவிடத்துக்குச் சென்று மலரஞ்சலி செலுத்தினார்.

பின்னர் ஜனாதிபதி மாளிகையில் உள்ள ஹோ சி மின் நினைவிடத்தைப் பார்வையிட்ட ஜனாதிபதி, சுதந்திரப் போராட்டத் தலைவரும் சுதந்திர வியட்நாமின் முதல் ஜனாதிபதியுமான ஹோ சி மின் இன் அஸ்தி அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைக்கு மலரஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு - சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் கலந்துகொண்டார்.

# கண்டி மாவட்டத்தில் காட்டு யானைகளின் அச்சுறுத்தலுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடு

**(எம்.ஏ.அமீனுல்லா)**



கண்டி மாவட்டத்தில் காட்டு யானைகள் அச்சுறுத்தல் உள்ள பகுதிகளில் அமைந்துள்ள கலமுதுன மற்றும் உடகல்தெபொக்க வாக்களிப்பு நிலையங்களுக்கு சிறப்பு பாதுகாப்புத் திட்டம் செயற்படுத்தப்படுமென்று கண்டி மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரி இந்திக உடவத்த தெரிவித்துள்ளார்.

வனவிலங்கு திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மையம் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுக் கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாக்குப் பெட்டிகள் போக்குவரத்து தொடர்பாக கண்டி மாவட்ட செயலகத்தில் நேற்று (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் கண்டி மாவட்ட செயலாளருமான இந்திக உடவத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் பேசிய அவர், நிலச்சரிவு, கனமழை மற்றும் திடீர் வெள்ளம் போன்ற இயற்கைப் பேரழிவுகளால் வாக்குப்பதிவுச் செயற்பாட்டில் ஏற்படும் இடையூறுகளைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபை, இராணுவம், கடற்படை மற்றும் பிற பாதுகாப்புப் படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கண்டி மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளின் போது பாதுகாப்புக்காக 4,400 காவல்துறை அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், 5,000 அதிகாரிகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இந்திக உடவத்த தெரிவித்தார்.

# மன்னார் மாவட்டத்தில் 5 உள்ளூராட்சி மன்றங்களிலும் 88 உறுப்பினர் பதவிக்கு 103 வேட்பாளர்கள் போட்டி

## மன்னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி கனகேஸ்வரன்




**(ஜோசப் நயன்)**

மன்னார் மாவட்டத்தில் இன்று செவ்வாய்க் கிழமை(6) இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று (05) மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் 91 ஆயிரத்து 373 வாக்காளர்கள் இம்முறை வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 5 உள்ளூராட்சி மன்றங்களில் இருந்தும் 88 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட வுள்ளனர்.

மன்னார் நகர சபையில் 18 வேட்பாளர்களும் மன்னார் பிரதேச சபையில் 23 வேட்பாளர்களும் நானாட்டான் பிரதேச சபையில் 19 வேட்பாளர்களும் முசலி பிரதேச சபையில் 19 வேட்பாளர்களும் மாந்தை மேற்கு பிரதேச சபையில் 24 வேட்பாளர்களும் உள்ளடங்கலாக கட்சி மற்றும் சுயேச்சைக் குழு சார்பாக 103 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அவர்களுள் மன்னார் நகரசபைக்கு 15 உறுப்பினர்களும் மன்னார் பிரதேச சபைக்கு 20 உறுப்பினர்களும் நானாட்டான் பிரதேச சபைக்கு 16 உறுப்பினர்களும் முசலி பிரதேச சபைக்கு 16 உறுப்பினர்களும் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 21 உறுப்பினர்களுமாக மொத்தம் 88 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 114 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்ட செயலகத்திலிருந்து நேற்றைய தினம் (05) வாக்குச் சாவடிகளுக்கு வாக்குப்பெட்டிகள் உள்ளடங்கலான அனைத்து பொருட்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிலையம் மற்றும் வாக்கு எண்ணும் நிலையங்களுக்கும் உரிய பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மக்கள் இன்று செவ்வாய்க்கிழமை (06) காலையிலேயே வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று பெறுமதியான வாக்குகளை அளிக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

இவ் ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கே.முகுந்தனும் கலந்துகொண்டார்.

# சப்ரகமுவ பல்கலை மாணவர் தற்கொலை விவகாரம்:

## கைதான 4 மாணவர்களுக்கு 16 வரை விளக்கமறியல்

**(எம்.ஏ.அமீனுல்லா)**

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் நான்கு பேர் பகிடிவதைச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட நிலையில், மே 16ஆம் திகதி வரை பலாங்கொடை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பகிடிவதைச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சக மாணவர் ஒருவரின் சமீபத்திய மரணம் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறை (சிஐடி) நேற்று முன்தினம் சந்தேக நபர்களைக் கைதுசெய்தது.

ஏப்ரல் 29ஆம் திகதி பகிடிவதைச் சம்பவத்தால் மனமுடைந்த சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவரொருவர் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த 23 வயது இரண்டாம் ஆண்டு மாணவர்.மே முதலாம் திகதி, தில்ஷான் பகிடிவதை காரணமாகத் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறி பல்கலைக்கழகத்தின் மற்றொரு மாணவர் சமனல வேவா பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக 4,000 தேர்தல் கண்காணிப்பாளர்கள்

## பணியில் ஈடுபடுத்த பஃவ்ரல் அமைப்பு நடவடிக்கை




உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு, நாடு முழுவதும் சுமார் 4,000 தேர்தல் கண்காணிப்பாளர்களை பஃவ்ரல் அமைப்பு பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்தத் தேர்தலின்போது வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் பணியில் அமர்த்தப்பட மாட்டார்கள் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில், நாடு முழுவதும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்காக சுமார் 4,000 கண்காணிப்பாளர்கள் பஃவ்ரல் அமைப்பால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக 800 க்கும் மேற்பட்ட நடமாடும் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# போலி காணி ஆவணங்களைத் தயாரித்த விவகாரம்; பிரசன்ன ரணவீர உள்ளிட்ட இருவருக்கு பிடியாணை

**(ஹனபி எம். தாஸீம்)**

கிரிபத்கொடை நகரில் கட்டுமானத்துக்காக அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலத்துக்கு போலி ஆவணங்களைத் தயாரித்த வழக்கு தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர மற்றும் களனி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் மில்ரோய் பெரேரா ஆகிய இரு சந்தேக நபர்களையும் உடனடியாகக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மஹர எண் 01 நீதிமன்றத்தின் நீதவான் காஞ்சனா டி சில்வா நேற்று (05) திறந்த பிடியாணை பிறப்பித்தார்.

மேலும், இரண்டு சந்தேக நபர்களின் வங்கிக் கணக்குப் பதிவுகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட வாகனப் பதிவுகளை குற்றப் புலனாய்வுத் துறைக்கு வழங்குமாறு சம்பந்தப்பட்ட வங்கி நிறுவனங்கள் மற்றும் மோட்டார் வாகன ஆணையர் துறை ஆணையருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

குற்றப் புலனாய்வுத் துறையின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து மஜிஸ்திரேட் அத்தகைய திறந்த பிடியாணைகளைப் பிறப்பித்து தொடர்புடைய வங்கி நிறுவனங்கள் மற்றும் மோட்டார் வாகன ஆணையர் துறை ஆணையருக்கு தொடர்புடைய வங்கிக் கணக்குப் பதிவுகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட வாகனப் பதிவுகளை வழங்க உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நவீன் வீரக்கோன், முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, களனி பிரதேச சபையின் முன்னாள் பிரதித் தலைவர் டாக்டர் ஜெயந்த சின்ஹபாகு கப்ரால் மற்றும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் முன்னாள் பாராளுமன்ற விவகார செயலாளர் சிங்கப்பூர் சரத் எனப்படும் டான் சரத் குமார எதிரிசிங்க ஆகிய நான்கு பேரையும் இந்த மாதம் 19ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

இந்தக் கட்டத்தில் குற்றப் புலனாய்வுத் துறையின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பி. விஜேதுங்க நீதிமன்றத்தில் பின்வருமாறு கூறினார்.

தற்போது தலைமறைவாகவுள்ள பிரசன்ன ரணவீர மற்றும் மில்ரோய் பெரேரா ஆகியோரைக் கைது செய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது. பிடியாணை அறிக்கைகளின் அடிப்படையில், அவர்களது வீடுகள் சோதனை செய்யப்பட்டன. ஆனால், அவர்கள் அந்தப் பகுதியை விட்டு வெளியேறிவிட்டதை நாங்கள் கண்டுபிடித்தோம். அவர்களின் தொலைபேசிகளும் துண்டிக்கப்பட்டிருந்தன. பிரசன்ன ரணவீர அம்பாறையில் உள்ள தமன பகுதிக்கு அடிக்கடி செல்வதாகத் தெரியவந்தது. அதன்படி அவர்கள் அங்கு சென்று தேடினர். ஆனால் நாங்கள் சந்திக்கவில்லை. எனவே, அவர்களைக் கைதுசெய்வதற்கு திறந்த பிடியாணையை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.

சந்தேக நபர்களுக்கு சுமார் 30 வங்கிக் கணக்குகள் உள்ளன. அந்த வங்கிக் கணக்குகளில் உள்ள பணம் மற்றும் பொருட்கள் மற்றும் வங்கிப் பெட்டகங்கள் ஏதேனும் இருந்தால் அவற்றின் விவரங்களைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட வங்கி நிறுவனங்களுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு நீதிமன்றத்தைக் கோருகிறோம்.

மேலும், தங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் குறித்த அறிக்கையை வழங்க மோட்டார் வாகனத் துறை ஆணையருக்கு உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்றும் அவர்கள் நீதிமன்றத்தைக் கோருகின்றனர்.

அவர்களின் சொத்துகளை முடக்குவதற்கு மேலும் நடவடிக்கைகளை எடுக்க இந்த அறிக்கைகள் தேவை. இரண்டாவது சந்தேக நபரான மேர்வின் சில்வாவுக்காக ஆஜரான ஜனாதிபதி வழக்கறிஞர் மைத்ரி குணரத்ன நீதிமன்றத்தில் பின்வருமாறு கூறினார்:

இந்த வழக்குக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லை. எனவே, சாட்சிகள் குற்றப் புலனாய்வுத் துறைக்களித்த சாட்சியங்களின் சுருக்க அறிக்கையை வழங்குமாறு நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறோம். நீதிபதி - குற்றப் புலனாய்வுத் துறை, ஆதாரங்களின் சுருக்க அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

மூன்றாவது மற்றும் நான்காவது சந்தேக நபர்களான டாக்டர் ஜயந்த சிங்கபாகு கப்ரால் மற்றும் டான் சரத்குமார எதிரிசிங்க ஆகியோருக்காக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நெவில் அபேரத்ன, இந்த சந்தேக நபர்களுக்கு பிணை வழங்குவதற்காக உயர் நீதிமன்றத்தில் பிணை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

நான்காவது சந்தேக நபரான டான் சரத்குமார எதிரிசிங்கவுக்காக ஆஜரான வழக்கறிஞர் தேசால் போல், நீதிமன்றத்தில் சாட்சியங்களைச் சமர்ப்பித்து சந்தேக நபரின் வணிகங்களின் மேலாளருக்கு அவர்களின் வணிகத்தை நடத்துவதற்கான அதிகாரத்தை வழங்க அனுமதி கோரினார்.மேலும் நீதவான் அனுமதி வழங்கினார்.

நீதவான் - இரண்டாவது சந்தேக நபரின் (மேர்வின் சில்வா) உடல்நிலை குறித்து சிறைச்சாலை மருத்துவர் நீதிமன்றத்தில் மருத்துவ அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

அதன்படி, அவருக்கு சிறப்பு மருத்துவ ஆலோசனை தேவைப்படுவதால், அவர் ராகம போதனா வைத்தியசாலைக்கு பரிந்துரைக்கப்பட்டு, மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். பல அறிகுறிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சிறைச்சாலை மருத்துவமனையும் ராகம போதனா மருத்துவமனையும் எந்தவொரு மருத்துவ பரிசோதனையும் செய்ய முடியாதென்று எங்களுக்குத் தெரிவிக்கவில்லை.

இரு தரப்பினரும் முன்வைத்த கருத்துகளைக் கவனித்த நீதவான், தற்போது காவலில் உள்ள நான்கு சந்தேக நபர்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். அதேவேளை, தலைமறைவாகவுள்ள இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்வதற்கான திறந்த பிடியாணையையும் பிறப்பித்தார்.

குற்றப் புலனாய்வுத் துறையின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் பி. விஜேதுங்க மற்றும் பொலிஸ் சார்ஜென்ட் டென்சில் ஆகியோர் வழக்குத் தொடர்ந்தனர். அதேநேரத்தில், சந்தேக நபர்கள் சார்பாக ஜனாதிபதி வழக்கறிஞர் மைத்ரி குணரத்ன, நெவில் அபேரத்ன, வழக்கறிஞர்கள் தேசால் போல், வீரேந்தா கனன்கேகே மற்றும் பியுமி உதாரா உள்ளிட்ட வழக்கறிஞர்கள் குழு ஆஜராகியது.


## வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்


| வாகன இலக்கம் | செசி இலக்கம் | வாகன வகை | தயாரிப்பு வகை |
|---|---|---|---|
| 15 - 6XXX | AT150 4024165 | MOTOR CAR | TOYOTA AT 150 |
| 64 - 1XXX | SU12014330 | MOTOR CAR | NISSAN B12 |
| 17 - 1XXX | AJ-1300597 | MOTOR CAR | HONDA E AJ CIVIC |
| 11 - 5XXX | A172A8012508 | MOTOR CAR | MITSUBISHI LANCER |
| KU - 9XXX | MAT612228CKR02787 | MOTOR CAR | TATA NANO |
| LC - 8XXX | S200P-0080764 | MOTOR LORRY | DAIHATSU HIJET |
| LL - 0XXX | LVAV2JBB4CN011151 | MOTOR LORRY | FOTON BJ1031V3JE4S |
| LF - 2XXX | LVBV3JBB18E006005 | MOTOR LORRY | FOTON BJ1036V3JB3-R |
| PV - 1XXX | LSCAB13G2CE007476 | MINI TRUCK | MICRO LOADER |
| DAF - 3XXX | LSYCJD2D7EG247015 | MINI TRUCK | BRILLIANCE SHINERY SY1020DB3AJI |
| PU - 9XXX | MA1FA2HRRC6L32678 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| PY - 9XXX | LGHT1A174D9818651 | MINI TRUCK | DFSK EQ1020DR |
| PV - 6XXX | MA1FA2HRRD6C28733 | MINI TRUCK | MAHINDRA MAXIMO PLUS VX |
| PW - 0XXX | MA1FA2HRRD6C27943 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |
| PR - 0XXX | MA1FA2HRRB6G34542 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| DAB - 3XXX | LSYCJD2D5EG273094 | MINI TRUCK | BRILLIANCE SHINERY SY1020DB3AJI |
| DAE - 9XXX | LVZKN9174GCA01906 | MINI TRUCK | DFSK EQ1020DR |
| PS - 8XXX | MA1FA2HRRC6A16109 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| RF - 5XXX | MF1540004558 | TRACTOR | MASSEY FERGUSON MF 1540 |
| RD - 4XXX | T2228949 | TRACTOR | FARMTRAC FT60 |
| RF - 4XXX | NH7375311 | TRACTOR | NEW HOLLAND 4710 |

- வாகனம் பரிசோதனை செய்தல் : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2025 மே 07, 08ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை. மே 09 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டெண்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 2025 மே 09 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டெண்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டெண்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- டெண்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள, டெண்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

**டெண்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டெண்டர் பத்திர கடித உறையின் முன் பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனைக்கான விலைமனுக்களுக்கான அழைப்பு" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டெண்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.**

முகாமையாளர்,
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.**
வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
தொலைபேசி இல. 0112 000 000
COMMERCIAL CREDIT

# திருமலை மாவட்டத்தில் 321 நிலையங்களில் வாக்களிப்பு



(சீனக்குடா செய்தியாளர் கியாஸ்)

திருகோணமலை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக 1000 பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், 13 உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து 136 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் நடவடிக்கைக்கான தேர்தல் பணிகளும் பூர்த்தியடைந்துள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இன்று(06) நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ள நிலையில், வாக்குப் பெட்டிகள் நேற்று (05) திருகோணமலை வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 321 வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெறவுள்ளன. இந்நிலையில், வாக்குப்பெட்டிகள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று (05) காலை 8.00 மணியளவில் திருகோணமலை விபுலானந்தா கல்லூரியில் ஆரம்பமாகின.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

321 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடவடிக்கை இடம்பெறவுள்ளது. இந்நிலையில், 129 நிலையங்களில் வாக்குகளை எண்ணும் பணிகள் இடம்பெறும்.

தேர்தலை அமைதியான முறையில் நடத்தி முடிப்பதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்காக 1,700 பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர். தேர்தல் பணிக்காக 3,820 அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டத்திலுள்ள 13 உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து 136 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 3,19,399 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக 14,337 அரச ஊழியர்கள் விண்ணப்பித்திருந்தனர் - என்றார்.

# மட்டு. வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் அனுப்பிவைப்பு





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் தேர்தல் மத்திய நிலையமான இந்துக் கல்லூரியிலிருந்து வாக்குப் பெட்டிகள் வாக்குச் சாவடிகளுக்குப் பலத்த பாதுகாப்புடன் நேற்று திங்கட்கிழமை (05) காலை 9.00 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

இந்நிகழ்வு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எம்.பி.எம்.சுபியான்,தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்ட செயலாளருமான திருமதி முரளீதரன் ஆகியோரின் மேற்பார்வையில் இடம்பெற்றது.


மட்டக்களப்பு மாவட்டத்தில் 1 மாநகர சபை, 2 நகர சபைகள், 9 பிரதேச சபை என 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 144 வட்டாரங்களிலிருந்தும் 11 அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் உட்பட 101 வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 4 இலட்சத்து 55 ஆயிரத்து 520 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். இதே வேளை, வாக்களிப்பதற்காக 444 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே மட்டக்களப்பு மாவட்டத்தின் தேர்தல் மத்திய நிலையமான இந்துக் கல்லூரியிலிருந்து வாக்குப் பெட்டிகள் வாக்குச் சாவடிகளுக்குப் பலத்த பாதுகாப்புடன் நேற்று திங்கட்கிழமை (05) காலை எடுத்துச் செல்லப் பட்டன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 353 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியிருந்த நிலையில், அவற்றுள் 90 வீதமான முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எம்.பி.எம்.சுபியான் தெரிவித்துள்ளார்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு; விசேட அதிதியாக சவூதி தூதுவர் பங்கேற்பு









(திராய்க்கேணி நவாஸ்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது ஆண்டு பொது பட்டமளிப்பு விழா சனிக்கிழமையும் (03) ஞாயிற்றுக்கிழமையும் (04) பல்கலைக்கழகத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கலாநிதி பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் பதில் உபவேந்தர் யூ.எல்.ஏ.மஜீத் தலைமையில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழா நிகழ்வில் 2,077 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இவ்விழாவில் விசேட அதிதியாக இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல்-கஹ்தானி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம், தொழில்நுட்பவியல் பீடம், கலை கலாசார பீடம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடங்களைச் சேர்ந்த 2,077 மாணவர்கள் இதன்போது பட்டங்களைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கண்காணிப்புப் பணியில் கபே





(ஏறாவூர் நிருபர்)

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான கபே அமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கண்காணிப்பதற்கான பணியை நேற்று (05) ஆரம்பித்துள்ளது.

கபே அமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்பு, மட்டக்களப்பு மற்றும் கல்குடா ஆகிய தொகுதிகளில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கபே அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.எல்.எம். மீரா சாகிப் தலைமையில் நடைபெறும் இப்பணியில் தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் இணை இணைப்பாளர்கள் பங்கேற்றுள்ளனர்.

குறிப்பாக இம்முறை தேர்தல் கண்காணிப்பில் நாற்பத்தைந்து தொண்டர்கள் இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்கான அடையாள அட்டைகள் மற்றும் சீருடைகளும் கையளிக்கப்பட்டன.

கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவுள்ள தொண்டர்களுக்கு தேர்தல் தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணிகளின்போது பயன்படுத்தப்படவுள்ள வாகனங்களுக்குக் குறியீட்டு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

# அம்பாறை வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் அனுப்பிவைப்பு

## மாற்றுத்திறனாளிகளுக்கு விசேட ஏற்பாடுகள்





(பாறுக் ஷிஹான்)

இலங்கையின் 2025 ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இன்று இடம்பெறவுள்ள நிலையில், அம்பாறை மாவட்ட தேர்தல் மத்திய நிலையமான அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்திலிருந்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப்பெட்டிகள் நேற்று எடுத்துச் செல்லப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 4,78,000 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் 458 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இதில் 202 இடங்களில் வாக்குகள் எண்ணப்படும்.

இதன்போது தெரிவாகும் பிரதிநிதிகள் அப்பகுதிக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலகருக்குத் தெரிவிக்கப்பட்டு பின்னர் உள்ளூராட்சி மன்றத்துக்குத் தெரிவான பிரதிநிதிகள் குறித்து உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் அறிவிப்பார்.

தொடர்ந்து வாக்குகள் உள்ளிட்ட சகல ஆவணங்களும் மத்திய நிலையமான அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்துக்கு எடுத்துவரப்படும். பின்னர் உத்தியோகபூர்வமாக உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான பிரதிநிதிகளின் பெயர் விபரங்கள் வெளியிடப்படும்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வாக்குச்சாவடிப் பொறுப்பதிகாரிகளுக்கு விசேட அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி ஓரளவுக்கு கண்பார்வை குறைந்த அல்லது கண்பார்வையற்ற நபர்கள் தங்கள் வாக்குகளை சுயமாக செலுத்தும் வகையில் வாக்குச்சீட்டின் மீது தொட்டுணரக்கூடிய ஸ்டென்சில் சட்டகமொன்றைப் பயன்படுத்தும் வசதி அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன், சக்கர நாற்காலி அல்லது ஊன்றுகோல் போன்ற கருவிகளின் துணையுடன் வரும் நபர்கள் வாக்களிப்பு நிலையத்துக்குள் இலகுவாகப் பிரவேசிக்கும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சக்கர நாற்காலியில் வருகை தரும் நபர்கள் மற்றும் உயரம் குறைந்தவர்கள் இலகுவாக வாக்களிக்கும் வகையில் வாக்குப்பெட்டியை குறைவான உயரத்தில் வைக்குமாறும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், பார்வைக் குறைபாடுகொண்டவர்கள் கண்ணாடி அல்லது லென்ஸ் பயன்படுத்தி வாக்களிக்க விரும்பினால் அதற்கும் வசதி செய்து கொடுக்குமாறும் குறித்த அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் ஆணைக்குழுவால் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையானது வாக்களிப்பவரின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணமாக ஏற்றுக்கொள்ளும்படியும் வாக்குச்சாவடி பொறுப்பதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# பாடசாலையில் திருட்டு: பொலிஸில் முறைப்பாடு

(மீராவோடை செய்தியாளர்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட ரிதிதென்னை இக்ராஹ் வித்தியாலயத்தில் திருட்டுச் சம்பவமொன்று நேற்றுமுன்தினம் (04) இடம்பெற்றுள்ளது.

பாடசாலை வளாகம் மற்றும் வகுப்பறைகளுக்கு இணைக்கப்பட்டுள்ள மின் இணைப்பு வயர்களே இதன்போது திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம்.றிஸ்மின் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவுசெய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் தீ விபத்து

(வாழைச்சேனை, மீராவோடை, கல்குடா செய்தியாளர்கள்)



வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் நேற்று திங்கட்கிழமை (05) காலை 7 மணியளவில் திடீர் தீ விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் எக்ஸ்ரே பிரிவிலேயே குறித்த தீ விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபை தீயணைப்புப் பிரிவினரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

மின்னொழுக்கால் குறித்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுவதுடன், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் எக்ஸ்ரே இயந்திர அறையினுள் மின்னொழுக்குக் காரணமாக ஏற்பட்ட திடீர் தீப் பரவலால் எக்ஸ்ரே இயந்திரத்தின் உப இயந்திரங்கள் மற்றும் கணினி தொகுதி உட்பட பொருத்தப்பட்டிருந்த குளிரூட்டியும் முற்றிலுமாக எரிந்து சேதமாகியுள்ளது.

குறித்த தீயை மட்டக்களப்பு மாநகர சபை தீயணைப்புப் பிரிவினர்,வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேச சபைகளின் செயலாளர்கள், மூவ் கல்குடா டைவர்ஸ் அனர்த்த அவசர சேவைப் பிரிவினர் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம்





லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 2025 சித்திரைப் புதுவருடக் கொண்டாட்டம் மல்வானையில் சிறப்பாக அண்மையில் (03) இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழன், அருண மற்றும் த மோர்னிங் ஆகிய பத்திரிகைகளின் ஊழியர்கள் கலந்து கொண்டனர். இதன்போது இடம்பெற்ற போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தகக்து.



# வியட்நாம் பாய் டின் விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டார் ஜனாதிபதி





வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நேற்று முன்தினம் (04) தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய பௌத்த விகாரைகளில் ஒன்றான பாய் டின் (Bai Dinh) விகாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசி பெற்றார்.

இலங்கை மற்றும் வியட்நாம் தேசியக் கொடிகளை ஏந்திய வியட்நாம் மக்களால் ஜனாதிபதிக்கு அதன் நுழைவாயிலில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

விகாரை வளாகத்தைச் சுற்றிப்பார்த்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை காண வீதியின் இருபுறமும் ஏராளமானோர் கூடியிருந்தனர். மேலும் அவர்கள் இரு நாடுகளின் தேசியக் கொடிகளையும் அசைத்து தமது மரியாதையைச் செலுத்தினர்.

விகாரையில் ஜனாதிபதி வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் தேரர்கள் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதியை ஆசீர்வதித்தனர்.



பின்னர் ஜனாதிபதி விகாரை வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மகா போதியை வழிபட்டார். இந்தப் போதி, 2023ஆம் ஆண்டு பாய் டின் (Bai Dinh) விகாரை வளாகத்தில் நடுவதற்காக இலங்கையிலிருந்து நன்கொடையாக வழங்கப்பட்ட அநுராதபுரம் ஸ்ரீ மகா போதியின் ஒரு கிளையாகும்.

இலங்கை மத்திய கலாசார நிதியத்தின் தொழில்நுட்ப வழிகாட்டுதலின் கீழ் போதியை சுற்றி நிர்மாணிக்கப்பட்ட மதிலையும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க திறந்து வைத்தார்.

பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விகாரை வளாகத்தில் சால் மரக்கன்றை நட்டார். இந்நிகழ்வைக் குறிக்கும் வகையில் அமைக்கப்பட்ட பெயர்ப் பலகையையும் பார்வையிட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் விகாராதிபதிக்கு நினைவுப் பரிசும் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

# கனேடிய உயர்ஸ்தானிகர்-சபாநாயகர் சந்திப்பு





இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ், சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்ரமரத்னவை பாராளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இரு தரப்பினருக்குமிடையே இடம்பெற்ற இச்சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

கனடாவில் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற கனேடியப் பிரதமருக்குத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்த சபாநாயகர், கனேடிய மக்களுக்கும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். அத்துடன், கனடாவுக்கும் இலங்கைக்குமிடையில் ஆறு தசாப்தத்துக்கு மேலாகக் காணப்படும் உறவுகளையும் நினைவு கூர்ந்தார்.

இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு கனடா தொடர்ச்சியாக வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கும் சபாநாயகர் நன்றி தெரிவித்தார். மகாவலி போன்ற நீர்ப்பாசனத் திட்டங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், கண்ணிவெடி அகற்றல், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களில் இலங்கைக்கு கனடா வழங்கிய உதவிகளையும் சபாநாயகர் நினைவு கூர்ந்தார். பொருளாதார ரீதியில் நெருக்கடியான நிலைமைகளின்போதும் கடன் மறுசீரமைப்பின் போதும் கனடா வழங்கிய உதவிகளுக்கும் சபாநாயகர் நன்றி தெரிவித்தார்.

கனடா பாராளுமன்றத்தில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கனேடியர்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்து வருவதை சபாநாயகர் பாராட்டியதுடன், இது கனடாவின் பன்முக கலாசார சமூகத்தின் பிரதிபலிப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த புதிய அரசாங்கம் உறுதியுடன் இருப்பதாகவும் இனரீதியான, மதரீதியான பிரிவினைகளை ஏற்படுத்துபவர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதில் அரசு உறுதியாக இருப்பதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார். அத்துடன், ஊழலை ஒழிக்கும் விடயத்தில் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

கண்ணிவெடி அகற்றும் விடயத்தில் இலங்கை அரசாங்கம் அக்கறையுடன் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளதெனச் சுட்டிக்காட்டிய கனேடிய உயர்ஸ்தானிகர், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் ஊழலை ஒழிப்பதற்கும் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளைப் பாராட்டினார்.

இரு நாடுகளினதும் பாராளுமன்றங்களுக் கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் தொடர்புகளை விருத்திசெய்துகொள்ளும் நோக்கில் இலங்கை - கனடா பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை பத்தாவது பாராளுமன்றத்தில் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் சபாநாயகர் இதன்போது தெரிவித்தார்.

இதன்போது இலங்கைக்கும் கனடாவுக்குமிடையிலான நீண்டகால நட்பை மேலும் மேம்படுத்துவது குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

# இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு

## மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி நிஷாந்த தெரிவிப்பு

*(இரத்தினபுரி நிருபர்)*





இரத்தினபுரி மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான அனைத்து தேர்தல் ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக இரத்தினபுரி மாவட்ட செயலாளரும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியுமான கே.ஜீ.எஸ். நிஷாந்த தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து நேற்று (05) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இரத்தினபுரி மாவட்ட உள்ளூராட்சித் மன்றத் தேர்தலில் 9,32,855 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. அதாவது இரத்தினபுரி மாநகர சபை, பலாங்கொடை நகர சபை, எம்பிலிப்பிட்டிய நகர சபை, எஹலியகொட, இரத்தினபுரி, குருவிட்ட, பெல்மதுல்ல, பலாங்கொட, இம்புல்பே, கொடகவெல, கஹவத்தை, வெலிகேபொல, நிவித்திகல, அயகம, கலவான, எம்பிலிப்பிட்டி மற்றும் கொலொன்ன ஆகிய பிரதேச சபைகள் என்பன உள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் 28,342 தபால் மூல வாக்காளர்கள் தங்கள் தபால் மூல வாக்குகளைப் பதிவுசெய்யத் தகுதி பெற்றிருந்தனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 689 ஆகும். வாக்கு எண்ணும் மையங்களின் எண்ணிக்கை 265 ஆகும். பிரதேச மட்டத்தில் முடிவுகளை வெளியிடும் மையங்களின் எண்ணிக்கை 249 ஆகும்.

விகிதாசாரப் பட்டியல்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையும் பெண்கள் பிரதிநிதித்துவத்தின் கீழ் நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் கணக்கிடப்பட்டு, ஒவ்வொரு சபையின் இறுதி முடிவும் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தால் அறிவிக்கப்படும்.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களுக்காக வட்டார மட்டத்தில் 258 பேரும் விகிதாசார மட்டத்தில் 165 பேர் உட்பட 423 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

மேற்படி மாவட்டத்தில் தேர்தல் பணிகளுக்காக 8,000 அரச அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், தேர்தல் பணிகளுக்காக 2,950 பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், 540 சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் இரத்தினபுரி மாவட்டத்தில் தேர்தல் கடமை போக்குவரத்துக்காக 669 வாகனங்கள் பயன்படுத்தப்படும். இதில் 339 அரச வாகனங்களும மற்றும் 330 தனியார் வாகனங்கள் அடங்கும். மேற்படி பயன்படுத்தப்படும் வாகனங்களில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 39 பஸ்களும், 10 தனியார் பஸ்களும் அடங்கும்.

உள்ளூராட்சி மன்றம் குறித்து தேசிய தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் மாவட்டம் முழுவதும் தங்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இரத்தினபுரி மாவட்டம் வெள்ளம் உள்ளிட்ட இயற்கைப் பேரழிவுகளைத் தொடர்ந்து எதிர்கொள்ளும் மாவட்டம் என்பதால் அனர்த்த சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்காக சிறப்புத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இரத்தினபுரி மாவட்ட செயலாளரும் இரத்தினபுரி மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான கே.ஜீ.எஸ். நிஷாந்த மேலும் தெரிவித்தார்.

# குருநாகல் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி





*(இக்பால் அலி)*

குருநாகல் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக குருநாகல் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி சந்தன திசாநாயக்க தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தில் இன்று நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. குருநாகல் மாவட்டத்தில் 21 உள்ளூராட்சி மன்றங்கள் அமைந்துள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள 333 வட்டாரங்களில் 1,092 வாக்களிப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குருநாகல் தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து வாக்குப் பெட்டிகள் பொலிஸ் பாதுகாப்புடன் வாக்குச் சாவடிகளுக்கு நேற்றுக் காலை 8.30 மணி முதல் அனுப்பிவைக்கப்பட்டன.

இம்மாவட்டத்தில் 14,30,276 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 373 வாக்கெண்ணும் மத்திய நிலையங்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லும் வகையிலும் மற்றும் அதனைப் பொறுப்பேற்கின்ற இடமாக மலியதேச மகளிர் கல்லூரி, சேர். ஜோன் கொத்தலாவெல கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரிகள் இயங்குகின்றன.

காட்டு யானைப் பிரச்சினைகள் உள்ள இடங்களில் மக்கள் காலையில் அச்சமின்றி வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்கும் வகையில் பிரதேச செயலகம் மற்றும் வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் இணைந்து பாதுகாப்பு நவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இதுவரையிலும் எந்தவிதமான அசம்பாவிதங்களுமின்றி மிகவும் அமைதியான முறையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளதாக குருநாகல் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி சந்தன திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# பதுளை மாவட்டத்தில் 18 சபைகளுக்கு 576 நிலையங்களில் வாக்களிப்பு





*(ஆர்.சுரேஸ்குமார், க.கிஷாந்தன்)*

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் தயார்படுத்தும் பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளதாக பதுளை மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி பண்டுக ஸ்ரீ பிரபாத் அபேவர்தன தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்திலுள்ள 18 சபைகளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட 14 கட்சிகள் மற்றும் 11 சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றைச் சேர்ந்த வேட்பாளர்கள் போட்டியிடுவதோடு 576 வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு பதுளை மாவட்ட வாக்குச் சாவடிகளுக்கான வாக்குப்பெட்டிகள் பதுளை மத்திய கல்லூரி மற்றும் தர்மதூத கல்லூரியிலிருந்து பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டன.

# கண்டி மாவட்டத்தில் 937 வாக்களிப்பு நிலையங்களும் தேர்தலுக்காகத் தயார்

*(எம்.ஏ.அமீனுல்லா)*





உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கண்டி மாவட்டத்திலுள்ள 22 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 637 உறுப்பினர்களை நியமிப்பதற்கு பன்னிரெண்டு இலட்சத்து இரண்டாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தெட்டு (12,02,558) பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வாக்குப் பெட்டிகள் விநியோகிக்கும் பணி நேற்று (05) முழுவதும் நடைபெற்றது. கண்டி மாவட்டத்தில் உள்ள 22 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட 18 அரசியல் கட்சிகள் மற்றும் 20 சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளன. இந்நிலையில் அனைத்து மன்றங்களுக்கும் 637 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு மாநகர சபை, 04 நகர சபைகள் மற்றும் 17 பிரதேச சபைகளுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

கண்டி மாவட்டத்தில் 937 வாக்களிப்பு நிலையங்களும் 368 வாக்கெண்ணும் நிலையங்களும் அமைக்கப் பட்டுள்ளன.

பிரதான செயற்பாட்டு அலுவலகம் மற்றும் தீர்மானங்களை முடிவெடுக்கும் குழு கண்டி மாவட்ட செயலகத்தில் இருந்து செயற்படுமெனவும் குறித்த நேரத்தில் வாக்குப் பெட்டி வெளியீட்டு மையங்கள் கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரி மற்றும் கண்டி ஸ்ரீ சுமங்கல கல்லூரி என்பவற்றில் செயற்படுமென தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்ட செயலாளருமான இந்திக உடவத்த மேலும் தெரிவித்தார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (05.05.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 188.8078 | 198.5382 |
| கனேடியன் டொலர் | 212.3968 | 221.2454 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40.2938 | 42.4443 |
| யூரோ | 332.8579 | 345.9647 |
| ஜப்பான் யென் | 2.0385 | 2.1161 |
| சிங்கப்பூர் டொலர் | 226.5426 | 236.5818 |
| ஸ்ரேலிங் பவுன் | 390.8724 | 405.1289 |
| சுவிஸ் பிரான்ங் | 355.8911 | 372.0601 |
| ஐ.அ. டொலர் | 295.2043 | 303.6974 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 794.3608 |
| குவைட் | குவைட் தினார் | 976.9782 |
| ஓமான் | ஓமான் றியால் | 777.8649 |
| கட்டார் | கட்டார் றியால் | 82.1613 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 79.8576 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 81.5350 |

# கொழும்பு விவேகானந்தா பழைய மாணவிகளுக்கான வலைப்பந்தாட்ட கிண்ணம் வேலு நாச்சியார் அணி வசம்





சம்பியன்ஸ்



2ஆம் இடம்



3ஆம் இடம்































கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டக் கிண்ணத்தை சவீதா சசிகுமார் தலைமையிலான வேலு நாச்சியார் அணி தன்வசப்படுத்திக் கொண்டது.

ஐந்து அணிகள் பங்குபற்றிய இப்போட்டிகளில் இறுதிப்போட்டிக்கு வேலு நாச்சியார் மற்றும் ஆர்யா அணிகள் முன்னேறின. இறுதிப் போட்டியில் இரு அணிகளும் சரிசமமாக முதற்பாதியில் மோதிக் கொண்ட போதிலும் இரண்டாம் பாதியில் வேலு நாச்சியார் அணி தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பி.ஹரிணி தலைமையிலான அணியை சிறப்பாக எதிர்கொண்டு 13 :8 என்ற கோல்கள் கணக்கில் வெற்றியைத் தனதாக்கியது.

இறுதிப் போட்டியில் விளையாடிய இரண்டு அணிகளிலும் இடம்பெற்ற வீராங்கனைகள் பலர் தாம் கல்வி பயின்ற காலத்தில் கல்லூரி வலைப்பந்தாட்ட அணியில் இடம்பெற்றிருந்த வீராங்கனைகளாவர். அவர்கள் கல்லூரி அணியை வலயமட்டப் போட்டிகளுக்கு கொண்டு சென்று பல வெற்றிகளைக் குவித்த பெருமையையும் பெற்றவர்களாவர்.

சசிகுமார் சவீதா, பெ.ஸ்ரீப்பிரியா, ம. கனுஷியா, சு.பத்மதர்ஷி, ம.இந்துஜா, எம். துஷாயந்தி, தீபா சண்முகதேவா ஆகியோர் வேலு நாச்சியார் அணியில் இடம்பெற்ற வீராங்கனைகளாவார்கள்.

இதேவேளை, மூன்றாம் இடத்துக்கான போட்டியில் ஆர்.சோனியா தலைமையிலான நீலாம்பரி அணி, ஏ.சாஹினா தலைமையிலான களஸ்திகா அணியை 6 : 3 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது.

ஐந்து அணிகள் பங்குபற்றிய இப்போட்டிகளில் ருத்ரா அணி முதல் சுற்றுடன் வெளியேறியது.

இந்நிகழ்வுக்கு பட்டயக் கணக்காளரும் கல்லூரியின் பழைய மாணவியுமான தேசபந்து திருமதி ஏ.பரிமளா கலந்து சிறப்பித்ததுடன் கல்லூரி அதிபர் மூ. மூவேந்தன், பழைய மாணவர் சங்கத்தின் பிரதித் தலைவர் மீனாட்சி சுந்தரம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# அடுத்த பாப்பரசர் யார்?



## கார்டினல்களின் இரகசியக் கூட்டம் நாளை



புதிய பாப்பரசருக்காக தயாரான ஆடை...

கத்தோலிக்கத் திருச்சபையின் 267ஆவது தலைவர், புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்யும் கார்டினல்களின் இரகசியக் கூட்டம் நாளை (07) ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில், வத்திக்கானிலுள்ள சிஸ்டைன் தேவாலயத்தின் கூரையில், புதிய புகைபோக்கி பொருத்தப்பட்டுள்ளது.

கத்தோலிக்கத் திருச்சபையின் 267ஆவது தலைவர் தெரிவுசெய்யப்பட்டதை இந்தப் புகைபோக்கி மூலம்தான், உலகம் முழுவதுமுள்ள 140 கோடி கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் உள்ளிட்டோர் தெரிந்துகொள்வர். இந்நிலையில், புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்யும் கார்டினல்களின் இரகசியக் கூட்டம் நாளை (07) ஆரம்பமாகவுள்ளது. இதற்காக 133 கார்டினல்கள் ஒன்றுகூடி வாக்குச்சீட்டு மூலம் தங்களுக்குள் ஒருவரை தலைவராகத் தெரிவுசெய்யவுள்ளனர்.

ஒவ்வொரு சுற்று முடிவிலும் வாக்குச்சீட்டுகள் எரிக்கப்படும். புதிய தலைவர் தெரிவுசெய்யப்பட்டால், வாக்குச்சீட்டுகள் எரிக்கப்பட்டு, புகைபோக்கி மூலம் வெண்மை நிறப் புகையும் தலைவர் முடிவாகவில்லை என்றால் கறுப்பு நிறப் புகையும் வெளிப்படுத்தப்படும்.

# உக்ரைனுக்கு எதிரான போரில் அணு ஆயுதங்கள் தேவைப்படாது

## ரஷ்ய ஜனாதிபதி புட்டின் தெரிவிப்பு



உக்ரைனுக்கு எதிரான போரில் அணு ஆயுதங்களுக்குத் தேவை இருக்காது - என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ''உக்ரைனுக்கு எதிரான போரை தர்க்க ரீதியாக நேர்மையான முடிவுக்குக் கொண்டுவருவதற்குத் தேவைப்படும் வலுவும் வழிமுறையும் ரஷ்யாவிடம் உள்ளன. இந்தப் போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டிய தேவை இருக்காது'' - என்றார்.

இரண்டாம் உலகப் போரின் வெற்றி தினத்தைக் கொண்டாடும் வகையில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் 72 மணிநேரம் நிறுத்தப்படுமென்று அண்மையில் புட்டின் அறிவித்ததால் அந்தப் போரில் ஜேர்மனியை ரஷ்யா வீழ்த்தியதைக் கொண்டாடும் விதமாக, மே 08 முதல் மே 10ஆம் திகதி வரை மனிதாபிமான அடிப்படையில் தாக்குதல் நிறுத்தப்படுமென்று அவர் தெரிவித்தார்.

இதனிடையே உக்ரைன் தலைநகர் கீவில் சனிக்கிழமை நள்ளிரவு ரஷ்யா மேற்கொண்ட ட்ரோன் தாக்குதலில் 2 சிறுவர்கள் உட்பட 11 பேர் காயமடைந்ததாக உக்ரைனின் அவசரகால சேவைப் பிரிவு தெரிவித்தது.

# சீனாவில் சுற்றுலாப் படகு கவிழ்ந்து 10 பேர் பலி; 74 பேர் உயிருடன் மீட்பு!



சீனாவில் சுற்றுலாப் படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன், 74 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

சீனாவின் யாங்சே நதியின் கிளை நதியான வூ நதியில் நேற்றுமுன்தினம் சுற்றுலாப் பயணிகள் சவாரி சென்றவேளை, திடீரென சூறைக்காற்றுடன் மழை பெய்த நிலையில், எதிர்பாராதவிதமாக படகு கவிழ்த்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 84 பேர் நீரில் மூழ்கினர். இதில் சிலர் நீந்தி கரைசேர்ந்த நிலையில், 10 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். 74 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

சம்பவம் குறித்து அறிந்த சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், காணாமல்போனவரைக் கண்டுபிடிக்க அனைத்துவிதமான முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டும் என்றும் காயமடைந்தோருக்கு சிறந்த மருத்துவ சேவை வழங்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

# இந்தியா - பாக். போர் பதற்றம்:

# பாதுகாப்புத்துறை செயலாளருடன் பாரதப் பிரதமர் முக்கிய ஆலோசனை



## தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுடனும் சந்திப்பு; நாடுமுழுவதும் நாளை போர் ஒத்திகை - மத்திய அரசு



இந்தியா- பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவும் நிலையில், பாதுகாப்புச் செயலாளர் ராஜேஷ் குமார் சிங் நேற்று (05) இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தனியாகச் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், நாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்தும் எல்லையில் நடைபெற்றுவரும் முன்னேற்றங்கள் குறித்தும் பிரதமர் மோடி ஆலோசித்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, நேற்று (05) பிரதமர் மோடியை சந்தித்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் உள்ளிட்ட அதிகாரிகள் ஆலோசனையில் ஈடுபட்டனர்.

**நாடு முழுவதும் போர் ஒத்திகை**

இந்நிலையில், நாளை (07) அனைத்து மாநிலங்களிலும் மக்கள் பாதுகாப்பை உறுதிசெய்யும் ஒத்திகையில் ஈடுபட இந்திய மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. இதனையடுத்து அனைத்து மாநில அரசுகளுக்கும் மாநில உள்துறை அமைச்சு அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடந்தால் தீயணைப்புத்துறை, பேரிடர் மீட்புத் துறை உள்ளிட்டவை எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து ஒத்திகையில் இடம்பெறும். உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை சேமித்து வைப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்படவும் வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிவில், பாதுகாப்பு நெறிமுறைகள் குறித்து பொதுமக்கள், மாணவர்களுக்கு பயிற்சியளிக்க மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படும் என்று உள்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வான்வழித் தாக்குதல் எச்சரிக்கை சைரன்களை செயற்படுத்துதல் தொடர்பாகவும் ஒத்திகை நடத்த மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, விமானப்படைத் தளபதி எயார் சீஃப் மார்ஷல் ஏ.பி.சிங் பிரதமர் மோடியை நேற்றுமுன்தினம் (04) தனியாகச் சந்தித்து ஆலோசனை நடத்திய நிலையில், நேற்று பாதுகாப்புச் செயலாளருடன் பிரதமர் தனியாக ஆலோசனை நடத்தியிருக்கிறார்.

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பைசரன் பள்ளத்தாக்குப் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடந்த 22ஆம் திகதி தாக்குதல் நடத்தி 26 பேரை சுட்டுக்கொன்றனர். இதற்குக் காரணமானவர்கள் மீது கற்பனைக்கும் எட்டாத வகையில் பதிலடி கொடுக்கப்படுமென பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

சிந்து நதி நீர் பகிர்வு ஒப்பந்தம் நிறுத்திவைப்பு, இந்தியாவிலுள்ள பாகிஸ்தானியர்களை வெளியேற்ற உத்தரவு, இந்தியா - பாகிஸ்தான் இடையே இறக்குமதி, ஏற்றுமதிக்குத் தடை, பாகிஸ்தான் விமானங்கள் இந்திய வான்வெளியில் பறக்கத் தடை எனப் பல்வேறு தடையுத்தரவுகளை மோடி அரசு பிறப்பித்துள்ளது.

**பதிலடி கொடுக்கும் நடவடிக்கையில் முப்படைகளுக்கும் முழு சுதந்திரம்**

இந்நிலையில், இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், முப்படைத் தளபதிகள், பாதுகாப்புப் படை தலைமைத் தளபதி ஆகியோருடன் பிரதமர் மோடி கடந்த வாரம் ஆலோசனை நடத்தினார். இதில் பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கையில் முப்படைகளுக்கும் முழு சுதந்திரமளித்தார். இதன் தொடர்ச்சியாக, இந்திய இராணுவம் பல்வேறு வகையான பயிற்சிகளையும் ஒத்திகைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி, பிரதமர் மோடியை சனிக்கிழமை (03) தனியாகச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இதனையடுத்து, விமானப்படைத் தளபதி எயார் சீஃப் மார்ஷல் ஏ.பி.சிங்கை பிரதமர் மோடி நேற்றுமுன்தினம் தனியாகச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இதன் தொடர்ச்சியாக, பாதுகாப்புச் செயலாளர் ராஜேஷ் குமார் சிங்கை பிரதமர் நரேந்திர மோடி நேற்று (05) சந்தித்து ஆலோசனை நடத்தினார். இந்தியா- பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவும் நிலையில், கடற்படைத் தளபதி, விமானப்படைத் தளபதி, பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரை பிரதமர் சந்தித்து ஆலோசனை நடத்தியமை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

**தாக்குதல் நிச்சயம் - ராஜ்நாத் சிங்**

2016இல் உரி பகுதியில் நடந்த தாக்குதலுக்குப் பதிலடியாக பாகிஸ்தான் எல்லைக்குள் 'சர்ஜிக்கல் ஸ்டிரைக்' நடத்தி தீவிரவாத முகாம்களை இந்தியா அழித்தது. 2019ஆம் ஆண்டு புல்வாமா தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க பாகிஸ்தானின் பாலகோட்டிலுள்ள தீவிரவாத முகாம்கள் மீது இந்தியாவின் மிராஜ்-2000 ரக போர் விமானங்கள் குண்டு வீசின. இதற்கிடையே டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்,

"பிரதமர் மோடியின் தலைமையின் கீழ், நீங்கள் விரும்புவது நிச்சயம் நடைபெறுமென நான் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன். பஹல்காம் தாக்குதலுக்காக, நமது எதிரிகளுக்கு நிச்சயம் தக்க பதிலடி கொடுக்கப்படும்" - என்றார்.

**ஆயுதப் பற்றாக்குறையை எதிர்நோக்கும் பாகிஸ்தான்**

பாகிஸ்தான் சமீபத்தில் உக்ரைனுடன் ஆயுத ஒப்பந்தம் செய்தது. இதில் எம்ஜிஎஸ் பீரங்கி வாகனங்கள், எம்109 மற்றும் பிஎம்-21 பீரங்கிகளில் பயன்படுத்தப்படும் 155-எம்எம் மற்றும் 122-எம்.எம். ரக குண்டுகள் ஏற்றுமதி செய்யப்பட்டதால், பாகிஸ்தானில் பீரங்கிகள் மற்றும் குண்டுகள் கையிருப்பு வெகுவாகக் குறைந்தது. இத்தகவலை கடந்த 02ஆம் திகதி நடைபெற்ற பாகிஸ்தான் இராணுவ கொமாண்டர்கள் மாநாட்டில் உயர் அதிகாரிகள் சுட்டிக்காட்டி கவலை தெரிவித்தனர்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே தீவிர போர் ஏற்பட்டால், பாகிஸ்தானிடமிருக்கும் பீரங்கி குண்டுகள் மற்றும் வெடிமருந்துப் பொருட்கள் 4 நாட்களில் தீர்ந்துவிடும் நிலை உள்ளது. வெடிமருந்து தொழிற்சாலைகளிலுள்ள உற்பத்தி இயந்திரங்கள் மிகவும் பழைமையானவை. பாகிஸ்தான் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்ததால் வெடிமருந்து தொழிற்சாலைகளை நவீனப்படுத்தவில்லை. அதனால் இங்கு உடனடியாக வெடிமருந்துப் பொருட்களை அதிகளவில் தயாரிப்பது சிரமம். பாகிஸ்தான் இராணுவம் பீரங்கி படையைத்தான் அதிகளவில் சார்ந்துள்ளது. அப்படைக்குத் தேவையான தளவாடங்கள் குறைவாக இருப்பது, பாகிஸ்தான் இராணுவத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.




# பேரழிவில் ஹொலிவுட்:

# வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கு 100 சதவீத வரி

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அதிரடி



வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் படங்களுக்கு அமெரிக்காவில் 100 சதவீத கட்டண வரி விதிக்கப்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். அமெரிக்காவுக்கு வெளியே தயாரிக்கப்படும் திரைப்படங்கள் தேசிய பாதுகாப்பு மற்றும் பிரசாரப் பாணியில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க திரைப்படத் துறையை மீட்டெடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கையை அவர் மேற்கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த செயல்முறையை தொடங்க வர்த்தகத் துறை மற்றும் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிக்கு அவர் அங்கீகாரம் அளித்துள்ளார். இது தொடர்பில் ட்ரம்ப் தனக்குச் சொந்தமான 'ட்ரூத்' சமூக வலைத்தளப் பக்கத்தில்,

''அமெரிக்க திரைப்படத் துறை மிக வேகமாக அழிந்து வருகிறது. மற்ற நாடுகள் அதற்கான முயற்சியை ஒருங்கிணைந்து மேற்கொண்டுள்ளன. அது அமெரிக்க தேசத்தின் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. அனைத்துக்கும் மேலாக இந்தப் படங்கள் பிரசாரப் பாணியிலுள்ளன.


எங்களுக்கு வேண்டியதெல்லாம் மீண்டும் அமெரிக்காவில் திரைப்படங்கள் எடுக்க வேண்டும். இந்தப் புதிய கட்டண முறை திரைப்படத் துறையில் நிலவும் போட்டியை சமன் செய்வதையும் அமெரிக்க தேசத்திலுள்ள ஸ்டூடியோக்கள் தங்கள் செயற்பாடுகளைத் தொடர ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது" என ட்ரம்ப் தெரித்துள்ளார்.

ஹொலிவுட் படங்களின் எண்ணிக்கையை தங்களது தேசத்தின் திரைப்பட சந்தையில் குறைக்கும் நடவடிக்கையை அண்மையில் சீனா முன்னெடுத்தது. சீனப் பொருட்களுக்கு அமெரிக்கா விதித்த வரி காரணமாக இந்த நடைமுறையை சீனா கையிலெடுத்தது. இந்நிலையில், ட்ரம்ப் வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் படங்களுக்கு நூறு சதவீத கட்டண வரி விதித்துள்ளார்.

இந்தக் கட்டண முறை ஹொலிவுட் சினிமாத் துறைக்கும் பின்னடைவாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில், கொரோனா தாக்கத்துக்குப் பிறகான பாதிப்பிலிருந்து ஹொலிவுட் சினிமா முழுவதுமாக மீளாத நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

டிஸ்னி, பாரமவுண்ட் மற்றும் வோர்னர் பிரதர்ஸ் போன்ற முக்கிய ஸ்டூடியோக்கள் இதனால் பாதிக்கப்படுமென அமெரிக்காவின் முன்னணி ஊடக நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. வரிச் சலுகைகள் மற்றும் திரைப்படத் தொழிலாளர்களுக்கு ஆகும் செலவு குறைவு போன்ற காரணங்களால் வெளிநாடுகளில் திரைப்படங்கள் தயாராகின்றன என துறை சார்ந்த வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# 1963இல் மூடப்பட்ட சிறையை மீண்டும் திறக்க ட்ரம்ப் உத்தரவு!



அமெரிக்காவில் கொடூர குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை அடைப்பதற்காக, 1963இல் மூடப்பட்ட அல்காட்ரஸ் சிறைச்சாலையை மீண்டும் திறக்குமாறு ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

சான்பிரான்சிஸ்கோ அருகேயுள்ள தனி தீவில் இயங்கிவந்த சிறைச்சாலையில், முன்பு பல முக்கிய குற்றவாளிகள் அடைக்கப்பட்டிருந்தனர்.

நிர்வாகச் செலவு அதிகரித்ததால் மூடப்பட்டு சுற்றுலாத் தலமாக மாற்றப்பட்ட சிறைச்சாலையை விரிவாக்கம் செய்து மீண்டும் திறக்க உத்தரவிட்ட டிரம்ப், இது சட்டம், ஒழுங்கை பாதுகாக்கும் நடவடிக்கையென விளக்கமளித்துள்ளார்.

# நுவரெலியா மாவட்டத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

## வாக்குப்பெட்டிகள் அனுப்பிவைப்பு
## 540 வாக்குச்சாவடிகளில் வாக்களிப்பு
## துஷாரி தென்னக்கோன் தெரிவிப்பு





***(எஸ்.கணேசன், செ.திவாகரன், தலவாக்கலை நிருபர்)***

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளை வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டுசெல்லும் பணிகள் நேற்று (05) திங்கட்கிழமை காலை இடம்பெற்றன.

நுவரெலியா மாவட்டத்தில் 540 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மூலம் நுவரெலியா காமினி மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து வாகனங்கள் மூலம் எடுத்துச்செல்லப்பட்டன.

இன்று (06) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான துஷாரி தென்னக்கோன் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளன. இந்த நிறுவனங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட 80 அரசியல் கட்சிகள் மற்றும் 09 சுயேச்சைக் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 2,485 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இவர்களில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை 300 ஆகும்.

இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர்களின் எண்ணிக்கை 6,10,117 ஆகும். இதில் 18,342 பேர் தபால் மூல வாக்காளர்களாவர்.

அத்துடன், நுவரெலியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைக்காக 6,352 அதிகாரிகள் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

போக்குவரத்துக்காக அரச மற்றும் தனியார் வாகனங்கள் அடங்கலாக 672 வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

எனவே, இன்று (06) காலை 7 மணிக்குத் ஆரம்பமாகி மாலை 4 மணி வரை வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப்பதிவு இடம்பெறவுள்ளது.

மேலும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு பொதுமக்கள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான துஷாரி தென்னக்கோன் தெரிவித்தார்.

## சிவனொளிபாதமலை யாத்திரைக்கு சென்ற பெண் விபத்தில் உயிரிழப்பு



சிவனொளிபாதமலை யாத்திரைக்கு சென்ற பெண்ணொருவர் நல்லதண்ணி - சிவனொளிபாதமலை வீதி ரத்துப் பாலமருகில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அக்குரஸ்ஸ, வல்பிட்ட பகுதியைச் சேர்ந்த எஸ்.என்.பி.குமாரி (45 வயது) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த குறித்த பெண்ணை நல்லதண்ணி பொலிஸார் மற்றும் மவுஸாகலை இராணுவ முகாமின் அதிகாரிகள் நல்லதண்ணி சுகாதார சேவைகள் மையத்தின் அம்பியூலன்ஸ் மூலம் மஸ்கெலியா பிராந்திய வைத்தியசாலைக்கு கொண்டுசென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் தனது கணவர், குழந்தைகள் மற்றும் கிராமவாசிகள் குழுவுடன் சிவனொளிபாத யாத்திரைக்காகச் சென்றுள்ள நிலையில், நேற்று முன்தினம் (04) யாத்திரையை முடித்துவிட்டு நல்லதண்ணி பகுதிக்கு மீண்டும் பயணித்துக் கொண்டிருந்தபோதே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நல்லதண்ணி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தால் உயர்ரக புதிய தயாரிப்புகள் அறிமுகம்




***(மஸ்கெலியா நிருபர்)***

2025 ஆம் ஆண்டுக்கான புத்தாக்க கண்காட்சிக்காக, தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், சிறப்பு தேயிலை வகைகளாக தேயிலை சோஸ் மற்றும் சோப்பு போன்ற புதிய தயாரிப்புகளையும் சிறப்பு மற்றும் கைவினைஞர் தேயிலை தயாரிப்புகளுக்குப் பயன்படுத்தக்கூடிய உயர் ரக தேயிலை தயாரிப்புகளையும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

கூடுதலாக ஆர்தர் சி. கிளார்க் மையம் மற்றும் தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றுக்கிடையேயான கூட்டுத் திட்டமாக வடிவமைக்கப்பட்ட தேயிலை இலைகளை முறையாகத் தேர்ந்தெடுத்து பறிப்பதற்கான ஒரு புதிய இயந்திரம் இந்தக் கண்காட்சியில் வழங்கப்பட்டது.

இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணையத்தால் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் மேற்பார்வையின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட 13ஆவது வருடாந்த கண்டுபிடிப்பு கண்காட்சி சமீபத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க கண்காட்சி மண்டபத்தில் மூன்று நாட்கள் நடைபெற்றது.

இந்தக் கண்காட்சியில் தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் டாக்டர் தனஞ்சய கோட்டவராச்சி புதுமையான தயாரிப்புகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் ஜே.லியனாரச்சி, கலாநிதி சம்பத் பத்திரனகே, எல்.ஜெயசிங்க, ஜே.டபிள்யூ.வெலகெதர மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



***கண்டி நகரில் கடந்த வாரம் முதல் பல இடங்களில் ஆங்காங்கே திண்மக்கழிவுகள் கொட்டப்பட்டிருந்தன. இதனால் ரோட்டரிக் கழக அங்கத்தவர்கள் இணைந்து கண்டி நகரைத் தூய்மையாக்கும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். கண்டி ரோட்டரிக் கழகத்தின் தலைவி திருமதி அவந்தி கருணாரத்ன மேற்படி சிரமதானத்தை ஏற்பாடு செய்திருந்தார். (ஜே.எம்.ஹாபீஸ்)***

# ஊர்காவற்றுறை இறங்குதுறைக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர்



யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் கோவில் இறங்குதுறைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் மேற்கொண்டிருந்தார்.

அவர் அங்குள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

இதன்போது பாலத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் பயன்பாட்டுக்கு உகந்ததாக அது இல்லையெனவும் சுட்டிக்காட்டிய மக்கள், இதனைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.மக்களின் கோரிக்கைகளையேற்ற அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், இறங்குதுறையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்தார். இதற்குரிய ஆரம்பக்கட்டப் பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படும் என்றும் கூறினார்.

# மன்னார் மாவட்ட செயலகத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட வாக்குப் பெட்டிகள்





***(ஜோசப் நயன்)***

மன்னார் மாவட்டத்திலுள்ள 05 உள்ளூராட்சி சபைகளுக்குமான வாக்குப் பெட்டிகள் நேற்று திங்கட்கிழமை (05) காலை 11 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திலிருந்து பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் வாக்களிப்பு நிலையங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டன.

மன்னார் நகர சபை, மன்னார், மாந்தை மேற்கு, நானாட்டான், முசலி ஆகிய பிரதேச சபைகள் உள்ளடங்கலாக 5 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்குப் பெட்டிகள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் வைபவ ரீதியாக அனுப்பிவைக்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 114 வாக்களிப்பு நிலையங்களுக்கு நேற்று (05) காலை 11 மணி முதல் மாவட்டச் செயலகத்திலிருந்து வாக்குப்பெட்டிகள் அனுப்பிவைக்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் ஐந்து சபைகளில் 103 உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய 114 வாக்களிப்பு நிலையங்களில் 91 ஆயிரத்து 373 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் ரூ.80 இலட்சம் பெறுமதியான நகை மீட்பு
### நெளுக்குளம் பொலிஸார் அதிரடி



***(வவுனியா நிருபர்)***

வவுனியாவில் ரூபா 80 இலட்சம் பெறுமதியான 35 பவுன் தங்க நகைகளை மீட்டுள்ளதாக வவுனியா நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன்பாக வவுனியா கணேசபுரம் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து 35 பவுன் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டிருந்தன.

மேலும், இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.ஏ.சமரக்கோன் தலைமையில் உப பொலிஸ் அதிகாரி எல்.எஸ்.வீரசிங்க, பொலிஸ் கான்ஸ்டபிள்களான நிரோஜன் (8137), தீபன் (80998) அடங்கிய குழுவினரால் விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை கொக்குவெளி பகுதியில் வைத்து 29 வயது இளைஞன் ஒருவரைக் கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 35 பவுன் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் நெளுக்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# வவுனியா மாவட்டத்தில் 1,605 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில்
## தெரிவத்தாட்சி அலுவலர் சரத்சந்திர தெரிவிப்பு



***(சி.திவியா)***

வவுனியா மாவட்டத்தில் 1,605 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ளதாக மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் அரச அதிபருமான பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று (05) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. ஒரு மாநகரசபை மற்றும் நான்கு பிரதேச சபைகளுக்காக 103 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இதற்காக 1,731 பேர் போட்டியிடவுள்ளனர். ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 293 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வாக்குப் பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் 154 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1,605 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட்டுளனர். 1,307 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்'' - என்றார்.

# வவுனியாவில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்குப்பெட்டிகள் அனுப்பிவைப்பு

***(வவுனியா நிருபர்)***

உள்ளூராட்சித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் வவுனியா மாவட்டத்தில் பூர்த்தியாகியுள்ளன.

இந்நிலையில், வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள 154 வாக்களிப்பு நிலையங்களுக்குமான வாக்குப்பெட்டிகள், வாக்குச்சீட்டுகள் மற்றும் ஏனைய தேவையாண ஆவணங்கள் வவுனியா மாவட்டச் செயலகத்திலிருந்து நேற்றுக்காலை முதல் அனுப்பிவைக்கப்பட்டன.

பொலிஸாரின் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ள நிலையில்,



வவுனியா மாவட்டத்தில் 5 உள்ளூராட்சி மன்றங்களுக்கான 103 பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்காக தேர்தலில் வாக்களிப்பதற்கு 1,29,230 பேர் தகுதிபெற்றுள்ளதுடன், அவர்கள் வாக்களிப்பதற்காக 154 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 56 வாக்கு எண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வாக்களிப்பு நிலையங்களில் தேர்தல் கடமைகளுக்காக சுமார் 1,605 அரச ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், 1,500 பொலிஸார் மற்றும் இராணுவத்தினருடன் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சுமுகமான முறையில் தேர்தலை நடத்துவதற்காக பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

# ஆறு சிக்ஸர்களை தொடர்ச்சியாக பறக்கவிட்டு சாதனை படைத்த பராக்



ஐ.பி.எல். வரலாற்றில் ஆறு பந்துகளில் ஆறு சிக்ஸர்களை தொடர்ச்சியாக எடுத்த முதல் வீரராக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் இளம் துடுப்பாட்ட வீரர் ரியான் பராக் வரலாறு படைத்தார்.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கெதிராக நேற்று முன்தினம் ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

207 ஓட்டங்கள் என்ற கடின வெற்றிக்கான இலக்கை நோக்கி ஆடிய ராஜஸ்தான் ஒரு கட்டத்தில் 12 ஓவரில் 102/5 என்ற நிலையில் இருந்தபோது பராக் தனது அபார ஆட்டத்தை முன்னெடுத்தார். 13ஆவது ஓவரில் மொயீன் அலி பந்தை வீசியபோது ஹெட்மையர் ஓர் ஓட்டம் எடுத்ததுடன் பராக் ஸ்ட்ரைக்குக்கு வந்தார்.

அதன் பிறகு, நான்கு பந்துகளை தொடர் சிக்ஸர்களாக, பின் ஒரு பந்து வைட், அதன் பின்னர் மீண்டும் ஒரு சிக்ஸர் என ஐந்து சிக்ஸர்களை அடித்தார். அடுத்த ஓவரில் வருண் சக்ரவர்த்தியின் பந்தில் ரிவர்ஸ் ஸ்வீப் மூலம் ஆறாவது சிக்ஸராக மாற்றினார்.

இதற்கு முன் கிறிஸ் கைல் (2012), கீரன் பொல்லார்ட் (2013), ரிங்கு சிங் (2023) ஆகியோர் தலா ஐந்து சிக்ஸர்களை அடித்திருந்தனர். இந்தச் சிக்ஸர்களில் எல்லாமே இரண்டாம் இன்னிங்ஸில் நிகழ்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

# முதல் தடவையாக மெட்ரிட் ஓபன் சம்பியனான கெஸ்பர் ரூட்



ஸ்பெயினில் நடைபெற்ற மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் நோர்வே நாட்டைச் சேர்ந்த உலகின் 07ஆம் நிலை வீரரான கெஸ்பர் ரூட் முதல் தடவையாக சம்பியன் பட்டம் வென்றார்.

பல முன்னணி வீர, வீராங்கனைகள் பங்கேற்ற மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடர் கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று முன்தினம் (04) நிறைவுக்கு வந்தது. இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

சம்பியனைத் தீர்மானிக்கும் இறுதிப் போட்டியில் முன்னணி வீரரான கெஸ்பர் ரூட் (நோர்வே), பிரிட்டனின் ஜேக் டிராபர் உடன் மோதினார். இந்தப் போட்டியின் முதல் செட்டை 7-5 என்ற புள்ளிக்கணக்கில் கெஸ்பர் ரூட்டும் 2ஆவது செட்டை 6-3 என்ற புள்ளிக்கணக்கில் ஜேக் டிராபரும் கைப்பற்றினர். இதையடுத்து வெற்றியாளரைத் தீர்மானிக்கும் 3ஆவது செட்டில் அபாரமாக செயற்பட்ட கேஸ்பர் ரூட் 6-4 என்ற புள்ளிக்கணக்கில் ஜேக் டிராபை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார்.

இதன் மூலம் மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரில் கெஸ்பர் ரூட் முதல் தடவையாக சம்பியன் பட்டம் வென்றதுடன் தனது டென்னிஸ் வாழ்க்கையில் 13ஆவது சம்பியன் பட்டத்தையும் கைப்பற்றினார்.

## IPL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 56

**மும்பை குஜராத்**

மும்பை - இரவு 7.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 53

கொல்கத்தா - 206/4 (20)
ராஜஸ்தான் - 205/8 (20)
கொல்கத்தா 1 ஓட்டத்தினால் வெற்றி

# விளையாட்டுத் துளிகள்

ஆர்.சி.பி. அணியுடனான ஆட்டத்தில் ஒரே ஓவரில் 33 ஓட்டங்களைக் கொடுத்ததன் மூலம் சென்னை அணிக்காக ஒரே ஓவரில் அதிக ஓட்டங்களை விட்டுக்கொடுத்த வீரர் என்ற மோசமான சாதனையை கலீல் அஹமட் (19ஆவது ஓவர்) படைத்துள்ளார். இதற்கு முன் லுங்கி என்கிடி (2020), சாம் கரன் (2021) ஆகியோர் தலா 30 ஓட்டங்களைக்கொடுத்ததே சாதனையாக இருந்தது.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த மாதம் 22ஆம் திகதி நடந்த பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கெதிராக இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்நிலையில், பாகிஸ்தானின் முன்னணி கிரிக்கெட் வீரர்களான பாபர் அசாம், முஹமட் ரிஸ்வான், ஷாகின் ஷா அப்ரிடி ஆகியோரின் இன்ஸ்டாகிராம் கணக்குகள் இந்தியாவில் முடக்கப்பட்டுள்ளன. முன்னதாக 16 பாகிஸ்தானிய யூடியூப் பக்கங்களை இந்தியா தடை செய்தது. மேலும், பாகிஸ்தானின் பல நடிகர் - நடிகைகளின் இன்ஸ்டாகிராம் கணக்குகள் இந்தியாவில் முடக்கப்பட்டன.

பஞ்சாப் அணியில் இடம்பிடித்திருந்த ஆஸி. வீரர் கிளேன் மேக்ஸ்வெல் விரலில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக எஞ்சிய தொடரிலிருந்து வெளியேறினார். இந்நிலையில், அவருக்குப் பதிலாக மற்றுமொரு ஆஸி. வீரர் மிட்செல் ஓவனை பஞ்சாப் அணி ரூ. 3 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

ஐ.பி.எல். தொடரின் ஒவ்வொரு சீசனிலும் அதிக தடவை (8 தடவைகள்) 500 ஓட்டங்களுக்கும் அதிகமாகக் குவித்த வீரர் என்ற சாதனையை விராட் கோஹ்லி படைத்துள்ளார். முன்னதாக டேவிட் வோர்னருடன் 500 ஓட்டங்களைக் கடந்து சமநிலையில் இருந்தார். அடுத்து கே.எல்.ராகுல் (6 தடவை), ஷிகர் தவான் (5 தடவை) ஆகியோர் உள்ளனர். நடப்பு ஐ.பி.எல். தொடரில் டேவிட் வோர்னர் விளையாடவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

# நியூஸிலாந்திடம் படுதோல்வியடைந்த இலங்கை



நியூஸிலாந்தின் 85 கிலோ கிராம் எடைக்குட்பட்ட றக்பி அணிக்கும் இலங்கை றக்பி அணிக்குமிடையிலான இரு போட்டிகள் கொண்ட றக்பி தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி படுதோல்வியைச் சந்தித்தது.

கண்டி நித்தவளை மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற வரலாற்று முக்கியம் வாய்ந்த போட்டியில் நியூஸிலாந்து அணி 50-10 என்ற புள்ளிகள் கணக்கில் அபார வெற்றியீட்டியது.

நியூஸிலாந்து றக்பி அணி 118 வருடங்களின் பின்னர் இலங்கையில் விளையாடுவது இதுவே முதல் தடவையாகும். இரண்டு போட்டிகள் கொண்ட இந்த றக்பி டெஸ்ட் போட்டி சேர் க்றஹாம் ஹென்றி கிண்ணத்துக்காக நடைபெறுகிறது. இரண்டாவது போட்டி கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# வித்தியார்த்த கல்லூரி ரக்பியுடன் கைகோர்த்த Swisstek Ceylon PLC



கொழும்பில் இடம்பெற்ற ஜெர்சி (சீருடை) வெளியீட்டின் மூலம் Swisstek Ceylon PLC நிறுவனம், 2025 பருவத்துக்கான கண்டி வித்தியார்த்த கல்லூரியின் 15 பேர் கொண்ட ரக்பி அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளராக இணைந்துள்ளது. கட்டிடத் துறையில் சீரமைப்பு, புனரமைப்பு, அழகுபடுத்தல் உள்ளிட்ட தரம் மிக்க பணிகளை முன்னெடுப்பதில் முன்னணி நிறுவனமாக விளங்கும் Swisstek, தனது சமூகப் பொறுப்பின் ஓர் அங்கமாக மாணவர்களுக்கும் விளையாட்டு வளர்ச்சிக்கும் துணை நின்று வருகிறது.

பாடசாலை விளையாட்டுகளுக்கான Swisstek கொண்டுள்ள அர்ப்பணிப்பானது, மூலோபாய கூட்டாண்மைகள் மூலம் அடுத்த தலைமுறையை ஊக்குவிக்கவும் மேம்படுத்தவுமான நீண்டகாலத் திட்டத்தின் ஓர் அங்கமாகும்.

இலங்கைக்கு சிறந்த மற்றும் சரியான எதிர்காலத்தை உருவாக்குவதன் அர்த்தம் என்ன என்பதை நிறுவனம் எப்போதும் மீள்வரையறை செய்து வருகிறது. அதே நேரத்தில், தனது 'For the Perfect Finish' எனும் வர்த்தகநாம வாக்குறுதியை தொடர்ந்து நிலைநாட்டும் முயற்சிக்கு எப்போதும் உண்மையாக செயற்படும்.

# ஒருநாள் தரவரிசையில் 4ஆம் இடத்துக்கு உயர்ந்த இலங்கை



*(அகீல் சிஹாப்)*

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் புதிய வருடாந்த அணிகளின் தரவரிசையின் படி ஒருநாள் அணிகளின் தரவரிசையில் இலங்கை அணி நான்காமிடத்துக்கு உயர்வடைந்துள்ளது.

ஐ.சி.சியால் நேற்று வெளியிடப்பட்ட குறித்த தரவரிசையின் படி வெள்ளைப்பந்து அதாவது, ஒருநாள் மற்றும் ரி20 தரவரிசையில் இந்தியா முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டது. டெஸ்ட் அணிகளின் தரவரிசையில் ஆஸி. அணி முதலிடத்தில் உள்ளது.

இதில் ஒருநாள் அணிகளின் தரவரிசையில் இலங்கை அணி ஐந்தாமிடத்திலிருந்து நான்காமிடத்துக்கு உயர்வடைந்தது.

இலங்கை அணி அண்மைக்காலங்களாக ஒருநாள் கிரிக்கெட்டில் பல சாதனை வெற்றிகளைப் படைத்துவரும் நிலையில், இந்த அடைவை எட்டியுள்ளது. இலங்கை அணி இறுதியாக கடந்த பெப்ரவரி மாதம் ஆஸி. அணியுடன் இரு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 என வென்றிருந்தது.

நீண்ட இடைவெளியின் பின்னர் இலங்கை அணி அடுத்த மாத இறுதியில் பங்களாதேஷ் அணியுடன் இருதரப்பு தொடரில் ஆடவுள்ளது. டெஸ்ட் தரவரிசையில் இலங்கை அணி ஆறாமிடத்திலும் ரி20 தரவரிசையில் ஏழாமிடத்திலும் உள்ளது.

## PSL - 2025

**முடிவு**

போட்டி இல. - 24

லஹூர் - 160/8 (15)
கராச்சி - 168/6 (14.3)
கராச்சி 4 விக்கெட்களினால் வெற்றி

# 04 மாதங்களின் பின் சர்வதேச கிரிக்கெட்டுக்கு திரும்பும் இலங்கை; பங்களாதேஷுடனான தொடர் அட்டவணை வெளியீடு

*(அகீல் சிஹாப்)*

சுற்றுலா பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கும் இலங்கை கிரிக்கெட் அணிக்கும் இடையில் நடைபெறவுள்ள இருதரப்பு கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

நீண்ட இடைவெளியின் பின்னர் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் பங்களாதேஷ் அணி, இலங்கை அணியுடன் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் மற்றும் தலா மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் ரி20 சர்வதேச தொடர்களில் விளையாடுகிறது. இலங்கை கிரிக்கெட் அணியை கடந்த பெப்ரவரி மாதம் அவுஸ்திரேலிய அணியுடன் இருதரப்பு

| DATE | MATCH | TIME | VENUE |
|---|---|---|---|
| 17th to 21st June | 1st Test Match | Day | GICS, Galle |
| 25th to 29th June | 2nd Test Match | Day | SSC, Colombo |
| | | | |
| 2nd July | 1st ODI | Day Night | RPICS, Colombo |
| 5th July | 2nd ODI | Day Night | RPICS, Colombo |
| 8th July | 3rd ODI | Day Night | PICS, Pallekele |
| | | | |
| 10th July | 1st T20I | Night | PICS, Pallekele |
| 13th July | 2nd T20I | Night | RDICS, Dambulla |
| 16th July | 3rd T20I | Night | RPICS, Colombo |

தொடரில் விளையாடியதன் பின்னர் கடந்த நான்கு மாதங்களாக சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவில்லை.

அண்மையில் நிறைவடைந்த ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறாத இலங்கை அணி நான்கு மாத இடைவெளியின் பின்னர் பங்களாதேஷ் அணியுடன் நடைபெறும் தொடருடன் சர்வதேச கிரிக்கெட் அரங்குக்கு திரும்புகிறது.

இரு அணிகளுக்கும் இடையில் முதலில்



நடைபெறவுள்ள டெஸ்ட் தொடர் ஜூன் மாதம் 17ஆம் திகதி காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது. இரண்டாவது டெஸ்ட் போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் 25ஆம் திகதி ஆரம்பமாகிறது. அதனைத் தொடர்ந்து மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் ஜூலை மாதம் 02ஆம் திகதி ஆரம்பமாகிறது. அதனை அடுத்து ரி 20 தொடர் ஜூலை மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகிறது. குறித்த தொடரில் பங்கேற்கும் பங்களாதேஷ் அணி ஜூன் மாதம் 13ஆம் திகதி இலங்கை வருகிறது.






Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo –07